
# மருதோன்றி



சாகித்திய விழா

சிறப்பு மலர் 2002

பிரதேச கலாசாரப்பேரவை, கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி

**JAMIYATHUDHA' WATHIL ISLAMIYYAH - KALKUDA**

M.P.C.S. Road,
Meeravodai, Oddamavadi,
Sri Lanka - Phone: 065-57182.

**جمعية الدعوة الإسلامية - الكودا**

يم.بي.سي. يس. ويدي
مير أوودي-اودماو أدي
سريلانكا
تلفون: ٠٦٥٥٧١٨٢

# ஜம் இய்யதுத் தஃவதில் இஸ்லாமிய்யா – கல்குடா

**எம். பீ. ஸீ. எஸ் வீதி, மீராவோடை, ஓட்டமாவடி.**

கோரளைப்பற்று மேற்கு - ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் பிரதேச கலாசார விழா சிறப்பாக நடைபெற தனது பின்வரும் கிளைகள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

1. இஸ்லாமிய நிலையம் - மாஞ்சோலை.
2. இஸ்லாமிய நிலையம் - மாவடிச்சேனை.
3. இஸ்லாமிய தஃவாநூலகம் - செம்மணோடை.
4. தாருஸ்ஸலாம் அஸ்-ஸலபிய்யா அநாதைகள் கலாபீடம் - மீராவோடை
5. அர்-ரஹ்மாகுர் ஆன் பாடசாலை - மாஞ்சோலை.

***இஸ்லாத்தை அதன் தூய வடிவில் தெரிந்து கொள்ளவும், நடைமுறைப்படுத்தவும் தொடர்பு கொள்ளவும்.***

**இஸ்லாமிய தஃவா நூலகம்**
செம்மணோடை
வாழைச்சேனை.


(உண்மையைப் பொய்யுடன் கலக்கவோ, உண்மையை அறிந்து கொண்டே அதனை மறைக்கவோ வேண்டாம்)

(அல் - குர்ஆன்)

# மருதோன்றி

## கோறளைப்பற்று மேற்கு பிரதேச சாகித்திய விழா

## சிறப்பு மலர் - 2002




கலாசாரபேரவை
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று மேற்கு

# கலாசாரப் பேரவை 2001 / 2002

*தலைவர் :-* திரு. வெ. தவராஜா(பிரதேச செயலாளர்)

*உபதலைவர் :-* திரு. எஸ். பொன்னம்பலம்(கண்காளர்)

*செயலாளர் :-* ஜனாப். ஏ.எல். பீர்முஹம்மட்(கலாசார உத்தியோகத்தர்)

*பொருளாளர் :-* ஜனாப். ஏ.எம். அலியார் (சமூகசேவை உத்தியோகத்தர்)

***உறுப்பினர்கள்***

எ.எம்.எ. காதிர் (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்)

எம். தபைர் (பிரதேச கல்விப்பணிப்பாளர்)

யூ. அஹ்மட் (முதன்மை ஆசிரியர்)

எ.எம். ஹனீபா (இளைஞர்சேவை உத்தியோகத்தர்)

எம்.சீ.எம். மன்சூர் (அபிவிருத்தி இணைப்பாளர்)

எ.எல். இஸ்மாயில் மௌலவி (ஆய்வுபெற்ற ஆசிரியர்)

எம்.எல்.எம். சியாத் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

எல். கலீலுர் ரஹ்மான் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

கே. பாலசுப்பிரமணியம் (இலிகிதர்)

எச்.எம்.எம். இஸ்மாயில் (ஆசிரியர்)

யூ.எல்.எம். நஜீப் (கிராம சேவகர்)

**மலர்க்குழு**

வெ. தவராஜா

எ.எல். பீர் முஹம்மட்

## கௌரவ எம். பீ. எம். அப்துல் காதர் பா. உ
## பிரதி அமைச்சர் மீன்பிடி சமுத்திரவளங்கள் அமைச்சு
## அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இலக்கியம் ஒரு மனிதனை முழு மனிதனாக்குகிறது. எமது மண்ணில் வாசனை வீசும் இலக்கியப் படைப்புக்கள் அனுபவம் மிகுந்த பல இலக்கிய வாதிகளால் படைக்கப்பட்டுள்ளதை அறிந்து பெருமையடைகின்றேன்

இப்படைப்புக்கள் எமது மண்ணில் பல இலக்கியவாதிகளையும், புத்தி ஜீவிகளையும் உருவாக்குமானால் அதுவே இப்படைப்புக்குக் கிடைக்கும் அங்கிகாரமாகும் இலக்கியம் வளர வேண்டும் எமது மண்ணில் துளிர் விடும் இலக்கியப்படைப்புக்கள் வளர்ந்து விருட்சமாக வேண்டும் அதற்காக முயற்சிப்பவர் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினால் சாகித்திய விழாவை ஒழுங்கு செய்து மலர் ஒன்றையும் வெளியிடுவதற்கு ஒழுங்கு செய்த கலைஞர் திரு வெ. தவராஜா, பிரதேச செயலாளர் அவர்களுடன் இணைந்த குழுவையும் பாராட்டுகிறேன்.

**எம். பி. எம். அப்துல் காதர்** பா.உ
பிரதி அமைச்சர்,
மீன்பிடி சமுத்திர வளங்கள் அமைச்சு

## மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

ஒட்டமாவடி என்னும் மருத நில ஒழுக்கங்களை உடைய ஒற்றுமை மிகு மக்கள் வாழும் புனித பூமியில் மருதோன்றி என்னும் சிறப்பு மலர் மலர்வது கண்டு உள்ளம் மகிழ்கின்றேன்.

பிரதேச செயலாளருக்கும் இச்சிறப்பு மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் என் வாழ்த்துக்கள்.

நன்றி.

**இ. மோனகுருசாமி**
அரசாங்க அதிபரும்,
மாவட்டச் செயலாளரும்,
மட்டக்களப்பு

## மேலதிக அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி

ஓட்டமாவடிப் பிரதேசச் செயலகக் கலாசாரப் பேரவையின், இம்முறை சாகியத்திய விழாவை வெகுசிறப்பாக நடாத்துவதையிட்டும், இவ்விழாவையொட்டி "மருதோன்றி" என்ற சிறப்பு மலரினை வெளியிடுவதையிட்டும் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எமது கலை கலாச்சார விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அது எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்த முறையிலே சென்றடைய வேண்டும். வெறுமனே சாகித்திய விழாக்களையும், கலை கலாசார விழாக்களையும் நடாத்தி முடிப்பதால் மட்டும் அவைகளைப் பாதுகாக்கமுடியாது. அவைபற்றிய ஆவணப்பதிவுகளும் இடம்பெறவேண்டும். அப்போதுதான் எதிர்காலச் சந்ததி எமது கலை கலாசாரங்களைச் சரிவர உணர்ந்து கொள்ளும். அந்த வகையிலே ஓட்டமாவடி பிரதேச செயலகம் வெளியிடுகின்ற இந்த மருதோன்றியும் எதிர்காலச் சந்ததியினருக்கும் பயனளிக்கும் சிறந்த ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எனவே மருதோன்றி, கலை கலாசாரம் சம்பந்தமான நல்ல பல அம்சங்களைத் தாங்கி வெளிவருவதோடு, வருடந்தோறும் இந்த மருதோன்றி மலரவேண்டுமென்று வாழ்த்தி நல்லாசி கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**வே. சண்முகம்**
மேலதிக அரசாங்க அதிபர்
மட்டக்களப்பு.

## உதவிப்பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மாநிலத்தின் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசம் செந்நெல் விளையும் கழனிகள் நிறைந்து காணப்படும் பிரதேசமாகும் இங்கு கிராமியக் கலைகள் மக்கள் வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றன இப்பிரதேசத்திலே தமிழ்,முஸ்லிம் மக்களது கலையம்சங்களான கிராமியக் கலைகள், கும்மி,கோலாட்டம்,களிகம்பு, கூத்து என்பன காணப்படுகின்றன. இக்கலைகளை மேலும்வளர்த்தெடுப்பதில் மக்களும் கலைமன்றங்களும், அரச நிறுவனங்களும் முயற்றிகள் மேற்கொண்டு வருகின்றன.

ஓட்டமாவடினில் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிவரும் கலாச்சாரப் பேரவை இப்பணியை சிறப்பாகச் செய்து வருவது மகிழ்ச்சியை த்தருகின்றது பிரதேசச் செயலாளர் திரு. வெ. தவராஜா அவர்கள் இத்துறையிலே மிகவும் ஈடுபாடும், ஆற்றலும் அனுபவமும் உள்ளவர் அவரோடு இணைந்து கலாசாரப்பேரவை செயலாளராக பணிபுரியும்கராசார உத்தியோகத்தர் ஜனாப் ஏஎல். பீர் முகமட் அவர்களும் இத்துறையில் நாட்டமுள்ளவர் இதனால் பிரதேச கலாசார விழாவொன்றைச் சிறப்பாக நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். கலாச்சார விழாவில் பாரம்பரியக் கலைகள் பல மேடையேற்றப்படுவதோடு விழாவில் சிறப்பு மலரொன்றும் வெளிவரவிருப்பது மனதிற்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

"மருதோன்றி" என்னும் பெயரில் வெளிவரவுள்ள சிறப்புமலர் நல்ல பல ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் என எதிர்பார்க்கலாம். மாணவர்களதும் கலை ஆர்வங்களதும் அறிஞர்களதும் கட்டுரைகள், கதைகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது ஏனெனில் கலாசாலா விழாவில்முக்கிய அம்சமாக மலர் வெளியீடே அமையவிருக்கின்றது பிற்சந்ததியினருக்கு இம்மலர் நல்லதொரு ஆவணமாக விளங்கப்போகிறது. இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள ஓட்டமாவடிப் பிரதேச கலாசாரப் பேரவையினைப் பாராட்டுவதோடு மலருக்கு நல்லாசி கூறுவதில் மன நிறைவடைகின்றேன்.

**எஸ். எதிர்மன்னசிங்கம்,**
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள்,
வ.கி. மாகாணம்

# பிரதேச செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி பிரதேசத்திலே முதன் முதலாக ஒரு சாகித்திய விழாவையொட்டி சிறப்பு மலரை வெளிக் கொணர்ந்ததில் பெருமகிழ்ச்சி.

ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாறு கொண்ட இப்பகுதி பல கலைகளையும், கலைஞர்களையும், எழுத்தாளர்களையும், ஆன்மீகவாதிகளையும், மார்க்கவாதிகளையும் உள்ளடக்கிய சிறப்பினைக் கொண்டதென்பதை இப் பிரதேச வரலாறு உணர்த்துகிறது.

இதற்கு மேலாகவும் ஒரு சிறப்புள்ளது அது தான் முஸ்லிம்களும், தமிழர்களும், பறங்கியர்களும், சிங்களவர்களும் அந்நியோன்யமாக வாழ்ந்து கொண்டிருப்பதும், முஸ்லிம்களதும், தமிழர்களதும் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுவதுமாகும்.

இன்றும் இவர்களுடன் இணைந்திருக்கும் தமிழ், முஸ்லிம் சகோதரத்துவ வாழ்வு மகிழ்வைத்தருகிறது.

இந்தப் பிரதேசம் பற்றிய பூர்வீகத்தை கலை கலாசாரத்தை, பண்பாட்டு விழுமியங்கள், வாழ்நிலையை ஆழத்தேடும் ஆர்வம் ஏற்பட்டு முயற்சித்த வேளை ஏதோ ஒன்றைத் தொட்டுச் சொல்லுமளவிற்கே ஆக்கங்கள் பெறமுடிந்தது. இது ஒரு தேடலுக்கான தொடக்கம் மட்டும்தான்.

இம்மலருக்கு மருதோன்றி எனப் பெயர்வைத்ததும் ஒரு காரணத்துடன்தான். மருதோன்றி கல்யாணம் முஸ்லிம்களிடையே சிறப்பானது. தமிழர்களிடமும் மருதோன்றி பூசும் பழக்கமுள்ளது. இன்றும் இச்சிறப்பு இவர்களிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே தான் ஒரு குறியீட்டுப் பெயராக இப் பெயரைத் தீர்மானித்தோம்.

இறுதியாக இம்மலர் சிறப்புற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றிகள், வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்,

**வெ. தவராஜா,**
பிரதேச செயலாளரும்,
பிரதேச கலாசார பேரவைத் தலைவரும்.

# உட்பொதிகை

## கவிதைகள்


*எமது உயிரின் உயிருக்குயிரான தலைவரே* - 18

எம்.என். தஸ்னீம் பானு

*நானும் என் கவிதையும்* - 32

ஏ.ஜி.எம். சதக்கா

*யுத்தமே நீ சிந்தனை செய்துபார்* - 38

எம்.எச். சிஹானா


## கட்டுரைகள்


*கல்குடா முஸ்லிம்களின் கலை இலக்கிய முயற்சிகள் - ஒரு குறிப்பு* - 9 - 10

எஸ்.எல்.எம். ஹனிபா

*கல்குடா முஸ்லிம் அண்ணாவி புலவர் பாரம்பரியம்* - 11 - 14

அகமட் லெப்பை பீர்முகமட்

*கல்குடா முஸ்லிம்களின் பண்டைய திருமண சடங்குகள்* - 15 - 17

ஏ.எம். அப்துல்காதர்

*வை. அஹ்மதின் இலக்கியப்பணி* - 19 - 22

திருமதி. பிதாயா ரி.கான்

*கல்குடா முஸ்லிம்களின் கிராமிய வைத்தியப்பாரம்பரியம்* - 25 - 28

ஏ.எல். பீர்முகம்மட்

*ஓட்டமாவடி வாழைச்சேனை பிரதேச கவிதை வளர்ச்சி* - 29 - 31

கலாநிதி. செ. யோகராஜா

*கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் அருகிவரும் கலாசாரப்பாரம்பரியம்* - 35 - 37

செல்வி. எம்.பி. ஹசியாபானு


## சிறுகதைகள்


*அழகுராணி* - 23 - 24

ராஜாத்தி

*சீதனம்* - 33 - 34

எம்.எம்.எப். முஜிதா


## ஏனையவை


பரிசுபெற்றோர் விபரம் - 40

கௌரவிக்கப்படும் கலைஞர் - 39

நன்றியுரை - 41

# கல்குடா முஸ்லிம்களின் கலை இலக்கிய முயற்சிகள் ஒரு குறிப்பு

எஸ். எல். எம். ஹனிபா

மட்டக்களப்பு மானிலத்தின் தெற்கே - அதன் முகமாக அமைந்திருப்பது ஓட்டமாவடி வாழை ச்சேனை முதலிய முஸ்லிம் கிராமங்கள்.

ஐந்து நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட இப்பகுதி முஸ்லிம்களின் பூர்விகம் கண்டி அக்குற னையாகும். முதலாவது விமலதர்ம சூரியனால் வெளி யேற்றப்பட்ட முஸ்லிம்களின் வழித்தோன்றல்களே இப்பகுதி முஸ்லிம்கள்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு இவர்களின் ஜீவனோ பாயம் லௌக்க வாழ்வின் நாட்டத்தைப் பார்க்கிலும் மார்க்கக் கல்வி நாடி இந்திய உப கண்டம் சென்ற ஆலிம்கள் இங்கு வாழ்ந்து மறைந்தார்கள்.

வயல்வெளிகளில் நெற்கதிர்கள் சினப்பட்டு நெல் மணிகள் வயிறு உப்பிநிற்கும் காட்சி எமது உழவனைக் கவிஞானக்கி மகிழ்ந்திற்று அதிரங்களின் அசைவில் கற்பனை சிறகடிக்க அவன் 'வாடி'யின் புரை யைக் கவிதையின் மேடையாக்கி அரங்கேற்றினான். இன்று அந்தக் கவிகளே நாட்டார் பாடல்கள் என்றும் - கிராமத்து இதயம் என்றும் பட்டம் பெறும் பாக்ய த்தை மாணாக்கர்களுக்கு வழங்குகிறது. உலக முடிவு நாள் வரையிலும் இந்த வாய் வழிப்பாடல்கள் உயிர்ப்புடன் வாழும்.

எங்கள் கிராமத்தில் நாட்டார் பாடல்களில் திளைத்தவர்களில் மறைந்த புலவர் உதுமான்கனி (மீராவோடை) அலியார் மகுமூது லெவ்வை (அக்குற ணையார் மகன் மீராவோடை) பூலா மீராசாகிபு (ஓடக் கரை) ஒட்டமாவடியில் மஃறுப் முஸ்தபாலெவ்வைப் புலவர்.

ஓட்டமாவடி புதூரில் கொன்னையர் குடும் பத்தைச் சேர்ந்த 'அகமதுக்காக்கா' ஓர் பிறவிக் கவிஞர். அவரின் "உள்ளது சொல் அகப்பை - சிரட்டை உள்ளது சொல் அகப்பை" அறம்பாடிய புலவன் அந்தச் சொல்லின் சத்யத்தில் அகப்பை வெடித்துச் சிதறியது.

இது ஒரு ஐம்பது ஆண்டுகாலத்திற்கு முந்திய வரலாறு.

இந்தப் புலவர்களில் பலர் வெள்ளக் காவியம் - சூறாவளிப்பாடல்கள். இயற்றுவதிலும் பாடுவதிலும் வல்லவர்கள் இவர்களில் இப்போது உயிரோடு வாழ் பவர் மீராவோடை முஸ்தபா லெவ்வை அண்ணாவியாராகும். அவரின் ஆற்றல்மிகு ஆளுமை யினால் கோலாட்ட நிகழ்ச்சிகளில் அரபு பாடல்களைப் புகுத்தி புதுமை செய்தவர். சிலம்படி சீனடி விளை யாட்டுகளிலும் ஈடு இணையற்றவர். எனது மக்கத்துச் சால்வை கதையால் வரும் அகமது லெவ்வை அண் ணாவியார் இவரிலிருந்து வந்தவர்

இலங்கையின் சுதந்திரதின விழாவில் அவரின் தலைமையிலான கோலாட்ட நிகழ்ச்சியும் கலந்து கொண்டு புகழ்பெற்றது (ஆண்டு நினைவில்லை)

இதன்பிறகு எமது இலக்கியம் நவீன தமிழ் இலக்கியத்தில் 1960களின் ஆரம்பத்தில் இறங்கியது 1960களின் ஆரம்பத்தில் ஓட்டமாவடியைச் சேர்ந்த எஸ். எல். எம். சாலிஹ் என்பவரின் சிறுகதை 'சுதந் திரனில்' பிரசுரமானது.

இதன்பிறகு 1962ல் வாழைச்சேனையிலிருந்து வை. அஹ்மத் எழுத்துலகில் பிரவேசிக்கிறார். அக் கால கட்டத்தில் 'தினகரன் புதன்மலர்' இலக்கியக் கனதி கொண்டு திகழ்ந்தது. குட்டிக்கதை - உரு வாக்கக்கதை கவிதைகள் என்று இளம் படைப் பாளிகளின் ஆக்கங்களை தாங்கி வெளிவந்தது. அன்பன் அஹ்மதின் அனேக குட்டிப் படைப்புகள் புதன் மலரிலேயே பிரசுரமாகியது அதைத் தொடர்ந்து அவருடைய முதல் கதை 1963 செப்டம்பர் இதழில் 'அடித்தகரம்' கதை பிரசுரமாகியது. அவரின் ஆளு மைமிக்க படைப்புகள் அனைத்தும் இளம் பிறை யிலேயே பிரசுரமாகியது. இவர் எழுத்துலகிற்கு வந்து இரண்டு வருடங்களுக்குப் பிறகே மீராவோடையைச் சேர்ந்த எஸ். எல். எம். ஹனிபா எழுத்துலகப் பிர வேசம் செய்தார்.

1965 தொடக்கம் ஒரு பத்தாண்டு காலம் எஸ். எல். எம். ஹனிபாவும் வை. அஹ்மத் அவர்களும் வேகமாக எழுதினார்கள்.

நிலச்சுவான்தர்களின் இறுக்கமான பிடிக்குள் சிக்கித்தவித்த பாவப்பட்ட மக்களின் மனச்சாட்சியின் குரலாக இவர்களின் எழுத்து திகழ்ந்தது.

1976ல் வீரகேசரியினுடாக வெளிவந்த வை. அஹ்மதின் 'புதிய தலைமுறைகள்' நாவல் அவ்வாண்டில் மிகச்சிறந்த நாவலுக்கான சாகித்ய மண்டலப் பரிசுகளைப் பெற்றுக்கொண்டது.

1960ல் வ. அ. இராசரத்தினம் அவர்கள் தனது 'தோணி' தொகுப்பிற்காக சாகிதிய மண்டலப் பரிசுகளைப் பெற்றதைத் தொடர்ந்து இருபத்தைந் தாண்டுகளுக்குப் பிறகு வை. அஹமத் எனும் தமிழ் எழுத்தாளர் அவ்விருதைப் பெற்றார்.

1978ற்குப் பிறகு நாட்டிலும் உள்ளூரிலும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் இவ்விரு எழுத்தாளர்களும் தூரஇடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதில் இவர்களின் படைப்பாற்றல் தடைப்பட்டது.

1980களில் பல புதிய முகங்கள் தரிசனம் தந்தார்கள். பெரும்பாலும் கவிதை படைப்பதிலேயே இவர்கள் முனைப்பு காட்டினார்கள் ஓட்டமாவடி வி. எ ஜ"னைத் ஓட்டமாவடி அஷ்ரப் ஓடையூர் தலிபா ஓட்டமாவடி இஸ்மாயில் முக்கியமானவர்கள்.

இவர்களில் முன்னைய இருவரும் கவிதைகளில் இம்மண்ணின் ஏக்கப் பெருமூச்சுக்கள் எறி கணைகளாக்கி சிதற பின்னய இருவரும் கவிதை என்ற பெயரில் ஏதோ பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

இவர்களை தொடர்ந்து அமர் எ. ஜீ எம். வாழைச்சேனை சதக்கா, வாழைமயில் என்று ஒரு புதிய பரம்பரையினர் கவிதையை நெம்புகோலாகக் கொண்டு கிளம்பினார்கள். எ. ஜி. எம். சதக்கா கதைகள் சொல்வதிலும் ஆர்வம் காட்டினார். வை. அஹமதுக்குப் பிறகு வாழைச்சேனையின் எழுத்துக்குத் துலக்கம் காட்டியவர் இவர் ஒருவரே.

வாழைச்சேனை அமர் விடுதலையின் நிகழ்வுகள் எனும் கவிதைத்தொகுதியை முதன் முதலில் 1980களில் வெளிக்கொணர்ந்தார். இலங்கையின் சிறுபான்மைச் சமுகங்களின் விடுதலை உணர்வுகளைத் தொட்டுக்காட்டிய முதல் தொகுதி இதுவே.

இவர்களைத் தொடர்ந்து 1980களின் சாய் பொழுதுகளில் ஓட்டமாவடி அறபாத் எழுத்துலகப் பிரவேசம் செய்தார். கதை, கவிதை, திறனாய்வு, ஆன்மீகம், என்று பல்வேறு களங்களிலும் தீவிரமாக இயங்கும் ஒரே படைப்பாளி இவராகும் சகல அடக்கு முறைகளுக்கும் எழுதிராக 'கலகம்' செய்தார். 1997ல் இவரின் எரிநெருப்பிலிருந்து கவிதைத் தொகுதியும் 1999ல் நினைத்தழுதல் கதைத்தொகுதியும் வெளிவந்தது. 'நினைந்தழுதல்' கதைத்தொகுதிக்கு சுதந்தர இலக்கியக் கழகத்தினரின் விருதுகிடைத்தது.

இதே அண்டில் ஏ.ஜி, எம். சதக்காவின் 'போர்க்காலப்பாடல்கள்' தொகுதியும் வெளிவந்தது. இத் தொகுதியும் மேற்படிகழகத்தின் விருதினைப் பெற்றதுடன் இலக்கிய பரப்பில் சலனத்தையும் ஏற்படுத்தியது.

இவர்களைத் தொடர்ந்து மீராவோடை எஸ் நளீம் 1980களின் இறுதியில் எழுத்துத்துறைக்கு வந்தார் ஒவியம் கவிதை என்று அவர் திட்டம் கொண்டார். 'கடைசிச் சொட்டு உசிரில்' கவிதைகளுக்காக வடகிழக்கு மாகாணத்தில் சாகித்ய பரிசினை பெற்றுக் கொண்டார்.

தொண்ணுறுகளின் இறுதியில் ஒரு பட்டாளமே எழுதத் தொடங்கியுள்ளார்கள். புதிய தொனி குழுவினர் முக்கியமாகச் சொல்லப்பட வேண்டிய இளைஞர்கள். எனதுபார்வையில் திருஸ்டிபட்டு விடும் என்பதற்காக அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல ஒரு பத்தாண்டு காலமாவது செல்லட்டும் எனக்கருதி பின் வாங்குகிறேன்.

இது ஒரு வரலாற்றுக் குறிப்பு மட்டும்தான் சிலர் விடுபட்டயிருக்கலாம் அவ்வாறு நிகழ்வது துரதிஸ்டமானது. அந்தப் பழியை நான் ஏற்றுக் கொண்டு விடைபெறுகிறேன். ◆

வாழும் கலைஞர்கள்

# கல்குடா முஸ்லிம் அண்ணாவி புலவர் பாரம்பரியம்

அகமட் லெவ்வை மீரமுகம்மட்

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மொழி இலக்கிய கலை கலாசார பண்பாட்டு முறை வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியவர்கள். அண்ணாவித்துவம். கிராமிய இலக்கியம் என்பவற்றில் அவர்கள் முந்திரை பதித்துள்ளனர். கிழக்கு மாகாணத்தின் பல முஸ்லிம் கிராமங்களில் இன்று வரை காணப்படும் அண்ணாவிமார்கள் கிராமியப் புலவர்களின் பெருக்கம் இதற்கு நற்சான்று. ஆயினும் கிழக்கு மாகாணத்தில் இவர்கள் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்க அளவில் மேற்கொள்ளப்பட வில்லை. எனறே நான் கருதுகின்றேன். எஸ். முத்து மீரானின் 'கிராமிய பாடல்கள்' போன்ற ஒரு சில ஆய்வு நூல்களே இது வரை வெளிவந்துள்ளன. இந்தவகையில் கல்குடா தொகுதி முஸ்லிம் கிராமங்களில் வாழும் அண்ணாவி மார்கள். கிராமியப்புலவர்கள் மற்றும் கலைஞர்கள் பற்றி எதுவித ஆய்வுகளும் இதுவரை மேற்கொள்ளப் படாத வேளை இது குறித்து ஆய்வு செய்ய நான் கொஞ்சம் கலங்கினேன். உண்மையில் எனது இந்த ஆய்வு கூட காலம் கடந்த ஓர் ஆய்வாகவே இருக்கிறது என நான் சந்தித்த துறை சார்ந்தவர்கள் எனக்கு உணர்த்தினார்கள். ஏனெனில் பல அண்ணாவிகள், புலவர்கள் அம்மண்ணில் வாழ்ந்து மரணித்து விட்டார்கள். இவர்கள் பற்றிய தகவல்கள் எதுவுமே ஆவனப் படுத்தப்படாத நிலையில், அவர்களைப் பற்றி அவர்களது குடும்பத்தார் பெரிதும் அறிந்து வைத்திருக்காத நிலையில் அவர்கள் இவ்வுலகை விட்டுப்பிரிந்து விட்டார்கள்.

சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலங்களில் பல புலவர்களும், அண்ணாவிகளும் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். அரபியிலும் தமிழிலும் கவிபாடும் திறமையுடைய முஹமூது ஆலம். 'அண் கரம் மாலை' என்ற மார்க்க போதனைக் கவிதைகளை வெளியிட்ட லெப்பைத் தம்பி ஆலிம் அப்துல்ஸமது ஆலிம், அசனார் புலவர், அகப்பைப் புலவர், உதுமான் கவிப்புலவர், இப்றாலெப்பைப் புலவர் சின்னவன் அண்ணா வியர் ஆகியோர் இவர்களில் சிலர். முர்ஸலம், மஸ்தார் மனிசி போன்ற பெண் புலவர்களும் இங்கு வாழ்ந்துள்ளனர். இன்னும் அறியப்படாத பல புலவர்களும் இருந் திருக்கின்றனர். இவர்கள் பற்றிய தகவல்கள், பாடல்கள் எனக்குக் கிடைக்காததினால் தற்போது உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு சிலரை நான் இங்கு ஆய்வுக்கு உற்படுத்தி இருக்கிறேன். எனது இந்த ஆய்வு கூட முழுமையானது என்று என்னால் கூற முடியாது. இதில் முக்கியமானவர்கள் எனக்கருதப்படும் சிலர் கூட விடுபட்டிருக்கலாம் என்று எனது உறுதியான கருத்து. இம்முயற்சியில் ஈடுபட விரும்பு வோருக்கு இது ஒர் ஆரம்பபடியாக அல்லது ஒரு சயிம்சையாக இருக்கும் எனநான் உறுதியாக நம்புகிறேன். எனது இந்த ஆய்வில் ஏதாவது தவறுகள் விட்டிருப்பின் தட்டிக் காட்டப்படும் பட்டத்தில் பெருமனதோடு ஏற்றுக் கொள்வேன்.

## கனித்தம்பி மீராசாய்வு புலவர்

கல்குடா முஸ்லிம் கிராமங்களில் வாழ்ந்து வரும் அண்ணாவிகளிலும் புலவர்களிலும் மிக முக்கியமானவராக தற்போது ஜயந்தியாயவில் வாழ்ந்து கொண்டிருக்கும் கனித்தம்பி மீராசாய்வு எனும் புலவரைக் காணுகின்றேன். நான் சந்தித்த புலவர்களிலும். அண்ணாவிகளிலும் இவர் மிகவும் திறமைசாவியாகவும், புலமைத்துவம் மிகுந்தவராகவும் காணப்படுகின்றார். 1921ம் ஆண்டு கல்முனை நற்பிட்டி முனைக் கிராமத்தில் பிறந்த இவர்களிக்சைக் கிராமத்தில் வாழ்ந்து வந்த தனது தாய் மாமனின் வீட்டில் வளர்ந்து அவரது மகள் முகதீன் பாவா பாத்தும்மாவை திருமணம் செய்து 6 பெண்பிள்ளைகளுக்கும், 1 ஆண்பிள்ளைக்கும் தந்தையாகவுள்ளார். வடகிழக்கில் நிலவும் வன்செயல் காரணமாக அத்துக்கல கிராமத்துக்கு இடம் பெயர்ந்து 10 வருடகாலம் அங்கு அகதியாக வாழ்ந்து தற்போது ஜயத்தியாயவில் குடியேறியுள்ளார். வாகனத்தில் பயணம் செய்யும்போது இராணுவத்தினருக்கும் பயங்கர வாதிகளுககுமிடையில் நடைபெற்ற மோதலுக்குள்ளாகி வெடில்பட்டு ஒரு கையும் ஊனமாக கண்பார்வையும் சரியாகத் தெரியாது பிச்சை எடுத்து வாழ்ந்து வருகின்றார்.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக அண்ணாவியாகவும் கிராமிய புலவராகவும் தனது புலமையை வெளிப்படுத்திவரும் இவரது தந்தையும் பாட்டனும் அண்ணாவிகளாகும். தாமாக பாடல்களை இயற்றிப்

பாடும் திறமையுள்ள இவர் எழுந்தமமானமாக தலைப் புக்கேற்ற விதத்தில் பாடல்களைப்பாடும் புலமையும் கைவரப் பெற்றவர். காத்தான்குடி, கல்முனை, போன்ற நகரங்களில் தனது புலமைக்கு பரிசில்களும் பெற்றுள்ளார். கடந்த பல வருடகளுக்கு முன் கோ.ப .மேபிர தேசசெயலாளரும் இவரது புலமையைப்பாராட்டி பொண்ணாடை போற்றி சான்றிதழும் பணப்பரிசும் வழங்கியது. கள்ளிச்சை, அத்துக்கல, ஜயந்தியாய முதலிய முஸ்லிம் கிராமங்களில் இவரால் பயிற்று விக்கப்பட்ட பல கோலாட்டக் குழுக்கள் இயங்கி வரு கின்றன. புலவரிடம் பல்வேறு தலைப்புக்களில் கவி பாடச் சொல்லி அவற்றை ஒலிப்பதிவு செய்துகொண் டேன். தாய் பற்றிக் கவிபாடச்சொன்னேன். ஓர் அரை மணி நேரம் பாடினார். நபி(ஸல்) அவர்கள் பற்றி எழுத்தமானமாகப் பாடமுடிமா என்றேன். பாடச் சொன்னா பாடத்தானே வேணும் எனக்கூறி ஓர் அரை மணிநேரம் பாடினார். அவர் பாடிய சில கவிவரிகள் பதத்திற்காக.

அருள் பெறும் ஒளியே
எங்கள் ஆதியின் நபியே
உங்களப் போத்தி – நானும்
உகப்புடன் பாடுதற்கு – வல்லவன்
அல்லாஹ்வின் உதவி நாடி
துவங்கினேன் என் கவியை

அர்ஷைத் துலக்கி வைத்தவர் – எங்கள் நபி
ஆலமெல்லாம் புகழ் பெற்றவர் – எங்கள நபி
புண்ணிய சீலர் எங்கள் நபியல்லோ
எங்கள் கண்மணியானவர் முகம்மது நபியல்லோ!
அவர எந்நாலும் புகழ்ந்திடுவோமே
எங்கள் நபிய ஏற்றி நாமும் போற்றிடுவோமே!

இஸ்லாத்தைப் பரப்புதற்கு எங்கள் நபி
எவ்வளவு கஸ்டப்பட்டார்
இந்தப் பூமிய பெரிதண்டு எண்ணாம
இந்தப் பூமியில் பொருள்பண்டம் எதுவும் சேர்க்காம
கலிமாவுடனே வந்து கரசேர்க்க வேணுமெண்டு
கஸ்டப்பட்டாரல்லாவா? எங்கள் நபியும்
கன கஸ்டப்பட்டாரல்லாவா?

காபிர்களெல்லாம் கூடி – எங்கள் நபிக்கு
கல்லில அடித்தார்களே – ரசூலுல்லாஹ்வுக்கு
கல்லால் அடித்தார்களே.
எவளவோ கஸ்டப்பட்டு எங்கள் நபி
இந்த தீன வளக்க முயற்சி செய்தாரே!
நபியுல்லாவும் வளர்க்க முயற்சி செய்தாரே......

1990களில் ஏற்பட்ட இனமுரண்பாடுகளாலும், வன்செயல்களாலும் இப்பிரதேச முஸ்லிம்கள் கடுமை யாகப் பாதிக்கப்பட்டனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட வர்களுள் புலவரும் ஒருவர். பொதுவாகப் புலர்கள் என்றால் பெண்ணையும் பொன்னையும் பற்றித்தான் பாடுவார்கள். ஆனால் இந்தப் புலவர் தான் வாழும் சமூகம் பற்றியும். அந்த சமூகம் 1950களில் பட்ட துயரம் பற்றியும் கண்ணீர் மல்கப்பாடுகின்றார்ள. 1990களின் பின் இடம் பெயர்வு வாழ்வில் அவர் எதிர்நோக்கிய இன்னல்கள் பற்றியும் பாடிய சில வரிகள் பின்வருமாறு.

ஆதிபெரியோன் ரஹ்மமானே
நான் அடியேன் உரைக்கிறேன்
கேளுங்கோ
கள்ளிச்சை நகரில இருந்த நாங்க
கக்குசமாகவே வாழல்ல
வாழ்ந்து இரக்கும் காலத்தில் – இந்த
வன்செயலால் அடிப்பட்டு –
வெலிக்கத்த
நகருக்கே வந்துவிட்டோம் –
வேகமாகவே
வந்தாரே இந்த ஜீ எஸ் – என்ன
விசயதமன்று கேட்டார் –
மக்களெல்லாம்
நாங்க கூடியே நடந்த முறைப்பாட்ட
முறையாகக் கூறினோம் – அந்த
நன்றி யுணர்வுள்ள ஜீ எஸ்ஸவரிடம்
............

புலவர்கள் கடந்த இடம் பெயர்வு வாழ்வில் அவரும், மக்களும் பட்டதுன்பங்கள் ஒன்றையும் விடாமல் அப்படியே கவியாய் படித்தார். விரிவையஞ்சி அவற்றை நான் இங்கு தவிர்த்துள்ளேன்.

## முஸ்தபா அண்ணாவியார்

அடுத்து கல்குடா முஸ்லிம் கிராமங்களில் வாழும் அண்ணாவிகளில் மிகவும் பிர பலமானவர் முஸ்தபா லெப்பை அண்ணாவியார். மீராவோடையில்

'அண்ணாவியார்' என்ற பெயரில் மிகவும் புகழ் பெற்ற வராக இவர் காணப்படுகின்றார். 1930ம் ஆண்டு மீராவோடைக் கிராமத்தில் பிறந்த இவர் ஒன்பது பிள்ளைகளின் தந்தையாவார். ஆரம்பத்தில் ஒரு கூலித் தொழிலாளியாக விளங்கிய இவர் 1965 முதல் ஓட் டமாவடி பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிளை முகா மையாளராக பொறுப்பேற்று 1991ல் ஓய்வு பெறும் வரை சங்கத்தின் மத்தியிலும் பொது ஜனங்கள் மத்தியிலும் நன்மதிப்பும் நேர்மையுமுள்ள முகாமை யாளராகத் திகழ்ந்தார். தனது சிறு பராயம் முதல் கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர் கோலா ட்டம், சீனடி, சிலம்படி, போன்றவற்றில் அபார திறமையுடையவர். இப்பிரதேசத்தில் நூற்றுக் கணக் கான இளைஞர்கள் இத்துறையில் இவரால் பயிற்று விக்கப்பட்டுள்ளனர். இவரிடம் பயிற்சி பெற்ற பல கோலாட்டக் குழுக்கள் பதூறியா, மாஞ்சோலை இக்பால் இளைஞர் கழக குழுவினர் மாகாண, மாவ ட்ட, பிரதேச மட்டப்போட்களில் பல வற்றில் வெற்றி பெற்று அண்ணாவியாருக்கும் பிரதேசத்திற்கும் புகழ் தேடிக் கொடுத்தவர்கள். முஸ்தபா லெப்பை அண்ணா வியார் எழுந்தமானகைப் பாடமுடியாதவர் என்றாலும் பாடல்களை இயற்றிப் பாடுவதில் கைதேர்ந் தவர். 1956ம் ஆண்டில் தான் இயற்றிய பல கிராமியப் பாடல்களைத் தொகுத்து இஸ்லாமிய கீதம் என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். துரதிஸ்டவ சமாக அதன் பிரதி எமக்குக் கிடைக்கவில்லை. அவரது பாடல்களிலே 1957ம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளம் பற்றிய பாடல் மிகவும் பிரபலமானது. அதே போல 1956ல் 'சந்தைக்குப் போற பெண்ணெ' என்று அவர் பாடிய பாடலும் மிகவும் பிரபல்யமானது. அவற் றின்சில பாடல் வாரிகளை இன்னும் சில மூத்த வர்கள் படித்துக் கேட்கமுடிகிறது.

பல்வேறு தேசிய, மாகாண, மாவட்ட விருது களை வென்றுள்ள முஸ்தபா லெப்பை அண்ணா வியார் கடந்த சில வருடங்களுக்கு முன் அனுராத புரத்தில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் எனது கலைப் பணிக்காக சுதந்திரதின விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டார். பிரதேச மட்டத்தில் அரசதிணைக் களங்களாலும் சுயாதின நிறுவனங்களாலும் பல முறை பொண்ணாடை போர்த்தியும் பொற்கிழி வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார். தான் நோய்வாய்ப்பட்டு உடல் பலவீனம் அடைந்துள்ள நிலையிலும் கலைத் துறையில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட வராக இருந்தது அவரது கலையார்வம் குன்றிவிட வில்லை என்பதை எனக்கு உணர்த்தியது. ஓய்வு பெற்ற நிலையில் கலைஞர்களுக்கு தாங்கள் என்ன புத்திமதி சொல்லவிரும் புகிறீர்கள் எனக் கேட்டபோது 'எத்துறையாயினும் ஒழுங் காகவும், திறமையாகவும், விடாமுயற்சியுடனும் ஈடுபட்டால் சிறப்படையும், கலையி னூடாக மற்றவருக்கு தொல்லை கொடுக்காது, அவர் களுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும். கலையை வைத்து பிழைப்பு நடத்தக்கூடாது. அது உள திருப் திக்காக செய்யப்படுவது இதையே எனது இளம் தலை முறைக் கலைஞர்களுக்கு நான் சொல்லிவைக்க விரும் புகிறேன்' என்றார் (அவரது பாடல்கள் சில வற்றை ஒலிப்பதிவு செய்தாலும் அவர் நோய்வாய் பட்டிருந்த தால் எழுததும் அளவுக்கு தெளிவானதாக இருக் கவில்லை)

## கலைஞர் மீராசாஹிப்

எமது பிரதேசத்தில் வாழ்ந்துவரும் கலைஞர் மீராசாஹிப் அவர்களாகும். 1934ம் ஆண்டு வாழைச் சேனையில் பிறந்த இவர் 7 பிள்ளைகளின் தந்தையா வார். பாடல் இயற்றுதல், பாடுதல் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுதல், நடித்தல் போன்ற பல் வேறு துறைகளில் புகழ்பெற்றவர். 'பாட்டுக்கார மீரிசா' இப்பிரதேச மக்கள் அவரை செல்லமாக அழைப்பர். வறுமையின் காரணமாக முறையான பாடசாலைக் கல்வி அறியாதவராயினும் படித்தவருக்கான பண்பும், கலைத்திறமையும் அவருக்கு புகழ்தேடிக் கொடுத் துள்ளன. 1960 முதல் பாடல் துறையில் பிர பல்ய மான இவர் 1965ல் இலங்கை வானொலியில் பாடகராகத் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 'தியாக உள்ளம்' 'தன் மானம்' 'வெள்ளை நிறச்சேலை' இப்படியும் மனிதர்கள்' 'வினையால் வந்த விளைவு' மாற்ற முடியுமா' முதலிய இவரது நாடகங்களை இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப் பாகியுள்ளன. மறக்க முடியுமா, என்ற இவரது நாடகம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல அரங்குகளில் மேடை யேற்றப்பட்டுள்ளது. இதுவரை 115 நாடகங்கள் இவ ரால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன.

கடந்த பல தசாப்பங்களாக கலைத்துறை யில் பிரலாபித்துக் கொண்டிருக்கும் கலைஞருக்கு 1982ல் 'கவிஇசைக் கலைமுரசு' பட்டமும் 2000ல் 'கலைநிலா'ப்பட்டமும் இப்பிரதேச கலை ஆர்வவர் களாலும் வழங்கப்பட்டது. கலைஞர் மீராசாஹிப் கோலாட்டத்துறையிலும் குறிப்பிடத்தக்க ஒருவர். பழைய காவியங்களை இசையாகக் கொண்டு அமைக் கப்படும் மரபு ரீதியான கோலாட்ட முறையிலிருந்து அல்குர்ஆன், அல்ஹதீஸ் போதனைகள் நபி (ஸல்) புகழ் என்பவற்றைப் பாடி இசையமைக்கும் புதுவழி

கோலாட்ட முறையை இவர் இப்பிரதேசத்தில் அறிமுகம் செய்தவர். இவரது புதுவழி கோலாட்ட முறை முதன்முதலாக ஓட்டமாவடி தேசிய பாடசாலை ஹிக்ரா அரங்கிலும், சுதந்திர தினவைபவத்தில் மட்டக்களப்பு வெபர் அரங்கிலும் மேடையேறியபோது பலரது பாராட்டையும் பெற்றது. வாழைச்சேனைப் பிரதேச கோலாட்டக் குழுக்கள் இம்முறையைப் பின் பற்றியே கோலாட்ட நிகழ்ச்சிகளை நடாத்துவது குறிப் பிடத்தக்கது. கலைஞர் மீராசாஹிப் அரசியல் மயப் பட்ட ஒரு பாடகர் என்பதை எல்லோரும் அறிவார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் தந்தை செல்வ நாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், இராசதுரை, மரக்கான் மதிக் கார், ஹிஸ்புல்லா, அலிசாஹிர் மௌலானா, முகை தீன் அப்துல் காதர் போன்ற பல அரசியல்வா திக ளின் புகழ்பாடி அவ்வப்போது அரசியல் மேடைகளை அலங்கரித்துள்ளார்.

கலைஞர் மீராசாஹிப் மிகவும் வறிய குடும் பத்தில் பிறந்து வளர்ந்தவர். இப்போதும் வறுமை யிலே அவரது காலம் களிந்து கொண்டிருக்கின்றது. "கலை இலக்கியவாதிகள் செல்வச் செழிப்பில் வாழ்ந்த வரலாறு மிகக் குறைவு, வறுமை என்பது அறிஞர் களின் அணிகலன்" எனக் குறிப்பிட்ட அவர் கடந்த 30 வருட காலங்களாக முஸ்லிம் சிறுவர்களுக்கு குர்ஆனையும், அடிப்படை மார்க்க அறிவையும் போதிக்கும் 'அல்மதிர ஸதுல் முஹம்மதிய்யா' எனும் போதனா பீடம் ஒன்றை நடாத்தி அதன் மூலம் கிடைக்கும் சொற்ப் வருமானத்திலேயே வாழ்ந்து வருகின்றார். இம்மத்ரஸா மூலம் 1000க்கு மேற்பட்ட முஸ்லிம் சிறார்களுக்கு அவரிடம் கல்விபயின்று, இன்று அவர்களில் பலர் நல்ல நிலையில் உள்ளனர். கலைஞர் மீராசாஹிப் எழுந்த மானமாக பாடல்களைப் பாடும் ஆற்றல் உடையவர். எந்த மெட்டில் படிக்கச் சொன்னாலும் உடன் பாடுவார். நபி (ஸல்) அவர்கள் பற்றி 'பைரவி' ராகத்தில் பாடுமாறு கேட்டுக்கொண்ட போது அவர் பாடிய பாடலில் சில வரிகள்...

வான்மறை குர்ஆன் சுமந்து
வல்லோனைத்தான் தொழுது (ii)
நீதி நபி நாயகமும்
நேர் வழியைக் காட்டி நின்றார் (ii)
வான் மறைக் குர்ஆன் சுமந்து .....

இங்காலக் கடமையினை
அருள்ஞான விதிமுறை (ii)
தெளிவோடு போதித்த ~ நம்
திருத்தூதர் நபிகளன்றோ (ii)
வான்மறைக் குர்ஆன் சுமந்து ....

கலைஞர் அவாகளிடம் தற்கால இளைஞர் களுக்கு புத்திமதி சொல்வது போல பாடச் சொன்னால் எப்படிப் பாடுவீர்கள் எனக் கேட்டதற்கு அவர் சினிமா இசையில் பாடிய பாடலின் சில வரிகள் ....

மானம் காக்கும் நேரமாச்சு
மனனே எழுந்து நில்லு!
தீனைக் காக்க எதுவந்தாலும்
உன்னை இழந்து நில்லு ...
மாண்புடைய வேதம்
இது மாநபியின் போதம் ...
மானம் காக்கும் நேரமாச்சு
மகனே எழுந்து நில்லு ...

கர்நாடக இசையில் பாடல் ஒன்றைப் பாடுமாறு கேட்டபோது பாடிய பாடலின் சில வரிகள் ....

கல்புக்கனியாய் விழைந்த கனி
ஹக்கன் தீன் கனி ...
சொர்க்கப் பதியாய் வந்த
நபிகள் தந்த ஜோதி தீன் கனி ...
கல்புக்கனியாய் விழைந்த கனி
ஹக்கன் தீன் கனி ...

முத்து முகப்பில் விளங்குகின்ற
முதல் கலிமா வேருமாய் (ii)
அதை விரும்பி நடக்கும்
விருப்பம் வந்தால் ...
கல்புக்கனியுமாய் ...

கலைஞர் பாடல்களில் ஒரு சில வரிகளை மட்டுமே இங்குதான் தொட்டுக் காட்டியுள்ளேன். உண்மையில் நான் எனது முகவுரையில் குறிப்பிட்டது கோல மேற்குறித்தவர்கள் எனது ஆய்வுக்கு உட்பட்ட வர்கள். இவர்களில் சிலரை அவர்கள் சார்ந்த அர சியல், குடும்பப் பின்னணி என்பன பிரபல்யப்படுத்தி யிருக்கவும் கூடும். ஆனால் இவைகள் எதுமில்லாத சுமுகத்தின் பார்வைக்குத் தெரியாமல் அல்லது பிரபல்ய மாகாமல் இன்னும் பலர் இலை மறை காய்களாக இருக்கலாம். பொதுவாக எல்லோர் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு புதிய தலை முறைக்கு அவர்கள் பற்றி உணர்த்தப்பட வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். ◆

# கல்குடா முஸ்லிம்களின் பண்டைய திருமண சடங்குகள்

ஏ. எம். அப்துல் காதர்
ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்

**"இருமணம் கலந்தால் திருமணம்"** என்பது முன்னோர் மொழியாகும் என்றாலும் இப்பிரதேச முஸ்லிம்களின் திருமண ஏற்பாடுகள் முற்றிலும் இக்கூற்றுக்கு முரணாகவே இருந்து வந்துள்ளது என்பதை அனுபவவாயிலாக அறிய முடிகிறது.

முந்திய காலங்களில் முஸ்லிம்கள் மத்தியிலே பெண்கள் கல்வி கற்பதென்பது அரிதாகவே இருந்தது. எனவே இருமனம் கலக்கும் சந்தர்ப்பங்களும் குறைவாகவே காணப்பட்டன. எனினும் திருமணத்தின் பின் இருமனம் கலந்து குறைவற்ற வாழ்வு வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. பெற்றாரின் ஏற்பாடுகளை பெரிதென மதித்து வாழ்ந்தமை அன்றைய சமூகத்தில் மிகவும் வரவேற்பையே பெற்றது எனலாம்.

## செப்புக்கொண்டு போதல்

வயது வந்த பெண் ஒருவர் வீட்டில் இருந்தால் அவருக்கு பொருத்தமான மணமகன் ஒருவரைத் தெரிவு செய்ய அன்றைய சமூக அமைப்பில் செல்வாக்குப்பெற்ற ஆலிமு ஒருவரிடம் பெண்ணின் தந்தை கூறுவார். ஆலிம் தனது கடமைகளின் போது மக்களை நன்கு அறிந்து வைத்திருப்பார் எனவே தன்னிடமுள்ள செல் வாக்கையொட்டி ஒருவரைச் சிபார்சு செய்வார். பெண்ணின் பெற்றார் அதனை ஏற்றுக்கொண்டால் மாப்பிள்ளை வீட்டாரை ஆலிமு சம்மதிக்கச் செய்வார். இதன்பின்னர் பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு மாப்பிள்ளை கேட்டு செப்புக் கொண்டு செல்வர். இதற்கான ஏற்பாடுகள் பெரும் தடல்புடலாக நடைபெறும். உற்றார் உறவினரை அண்டை அயலார் அனைவரையும் அழைத்து ஆலோசனை நடாத்தி, பலகாரங்கள் போன்ற இனிப்புப் பண்டங்களுடன் செப்பு எடுத்துச் செல்லப்படும். உண்மையிலே இது ஒரு கோலாகலமான நிகழ்ச்சியாகவே காணப்படும். பெண்களே இதில் கூடுதலாக பங்கேற்பர். குரைவையும் வெடியும் குதூகலமும் நிறைந்து கிடக்கும். விருந்தோம்பல் வெகுசிறப்பு அம்சமாக விளங்கும். செப்பு வந்து மறுதினம் ஆலிமு சகிதம் உறவினர் ஒன்று சேர்ந்து செப்பை அவிழ்ப்பர். அவர்களே முதலில் ஒன்று சேர்ந்து சுவை அறிபவர்களாகவும் இருப்பர். அவிழ்த்த செப்பில் இருந்த பொருட்கள் அண்டை அயலார் உற்றார் உறவினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். அடிக்கடி இருசாராரும் வருவதும் போவதுமாக உறவு கொண்டாடுவர்.

## வாழைப்பழ பெட்டி கொண்டு செல்லல்

பெண் வீட்டார் கொண்டு வந்த ஏனங்கள் மாப்பிள்ளை வீட்டாரிடமும் மற்றவர்களிடமும் தேங்கிக் கிடக்கும். இதனை ஒன்று சேர்த்து பெண் வீட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இதிலும் பலகாரம், வாழைப்பழம், இனிப்புப் பொருட்கள் என் பன முக்கிய இடம் பெறும். ஏற்பனவே செப்பில்கிடந்த பொருட்கள் பெற்றவர் இதனை அனுப்புவர். மணமகளுக்கான கூறைச்சேலை போன்றவையும் இத்துடன் அனுப்பி வைப்பர். வைபவம் செப்பு கொண்டு செல்வது போன்றே இடம்பெறும். பெண்ணை அழகு பார்க்கும் நிகழ்ச்சியும் முக்கியமாக இதில் இடம் பெறும். இரு வீட்டாரும் சுகமான சூழ்நிலையில் பழகுவர்.

## கல்யாணம் பேசுதல்

ஆலிம் பின்னர் ஒரு நல்ல நாளில் திருமணம் பேசுவதற்கான அறிவிப்பைக் கொடுப்பார். இருசாராரும் ஏற்பாடுகளைச் செய்வர். பெண் வீட்டார் ஆலிமு சகிதம் உற்றார் உறவினர் புடைசூழ மணமகன் வீட்டிற்குச் செல்வர். இந்த நிகழ்ச்சியில் ஆண்களே கூடுதலாக இடம்பெறுவர். மணமகள் வீட்டின் சார்பாக பேச்சு ஆரம்பிக்கப்படும். கைக்கூலி சீதனம் போன்ற ஏற்பாடுகளும் இவ்வைபவத்திலே வெளிப்படையாகவே பேசி தீர்வு காணப்படும். இருசாராரும் இணக்கம் கொண்டால் திருமணத்திற்கான திகதி தீர்மானிக்கப்படும். இத்திகதி பிறைக்கணக்கு அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். பெரும்பாலும் வளர்பிறை நாட்களே பொருத்தமான நாளாகத் தேர்ந்தெடுக்கப்படும். சில

சந்தர்ப்பங்களில் கொடுக்கல் வாங்கல் பேச்சு வார்த்தைகளில் இணக்கம் காணப்படா விட்டால் திருமண ஏற்பாடுகள் முறிவடைவதும் உண்டு. பேச்சுவார்த்தையில் சுமுகமான தீர்வு ஏற்பட்டால் மணமகனுக்கு பெண்ணின் தந்தை மோதிரம் அணிவிப்பார். சிற்றுண்டி வைபவத்துடன் சிறப்பாக வைபவம் முடிவுறும். மறுதினம் பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு புட்டுப் பெட்டி அனுப்பப்படும்.

## திருமண அழைப்பு

நல்ல நாள் தீர்மானிக்கப்பட்டதும் கல்யாண ஏற்பாடுகள் தொடங்கும். முதலில் இரு வீட்டாரும் அழைப்புக் கொடுக்க ஆரம்பிப்பர். தற்கால நடை முறையிலுள்ள அழைப்பிதழ்கள் வழங்கும் வழக்கம் குறைவாகவே இருந்தது. வட்டா என்ற ஒரு பாத்திரத்தில் வெற்றிலையும் பாக்கும் வைத்து வெள்ளைத் துணியால் மூடி மிக மரியாதையுடன் அழைப்புக்கள் கொடுக்கப்படும். உண்மையிலேயே இது ஒரு மதிப்புமிக்க அழைப்பாக மக்கள் ஏற்றுக்கொள்வர். தவறாது வைபவத்திலும் கலந்து கொள்வர்.

## விருந்தும் மௌலூதும்

இருசாரார் வீட்டிலும் விருந்துபசாரமும் மௌலூதும் இடம்பெறும். என்றாலும் மணமகள் வீட்டில்தான் திருமணம் என்பது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்து என தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச் சியானபடியால் அவர்களின் புகழ்பாடும் நிகழ்ச்சியாகவே இது கருதப்படும். மிகவும் பாசத்துடனும், மரியாதையுடனும் இந்நிகழ்ச்சி நடாத்தப்படும். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஓதுபவர்களுக்கு அன்பளிப்பாக பணமும் வழங்கப்படுவதுண்டு. பள்ளிவாசல்களில் கடமைபுரியும் ஆலிம் லெப்பை முஅத்தின் போன்றோர் இந்நிகழ்ச்சியில் முக்கிய இடம் பெறுவர்.

## மருதோன்றி மாற்றுதல்

மௌலூதும் விருந்தும் முடிந்த பின்னர் பெண்கள் ஒன்று கூடி மருதோன்றி போடும் நிகழ்ச்சியை ஆரம்பிப்பர். பெண்களே முழுக்க முழுக்க இதில் இடம் பெறுவர். மருதோன்றிக் கல்யாணம்தான் சிறப்பானது என்பது பெண்கள் கருத்து. மேள வாத்தியமும் குரவையும் வெடியும் இவ்வைபவத்தில் அதிகமாக இடம்பெறும். சில நேரங்களில் இந்நிகழ்ச்சி விடியற்சாமம் வரை நடை பெறும். பங்கு பற்றுகின்ற பெண்களுக்கு உதவியாக செல்லும் ஆண்கள் மிகவும் பொறுமையை மேற்கொள்ள வேண்டியும் ஏற்படும். பெண்ணுக்கு முதல் மருதோன்றி அணிவித்து விட்டே மாப்பிள்ளை வீட்டுக்கு மருதோன்றி கொண்டு செல்லும் பொழுதே இவ்வாறான கட்டங்கள் ஏற்படும். நான் பெரிது, நீ பெரிது என்ற போராட்டம் இரு சாராரிடமும் காணப்படும். பின்னர் சமரசம் ஏற்பட்டு வைபவம் முடிவு பெறும். பெரும்பாலும் இந்நிகழ்ச்சி இரவு நேரங்களிலேயே இடம் பெறும்.

## காவின் எழுதுதல்

பெண் வீட்டார், ஆலிமு, பதிவாளர், உற்றார் உறவினர் சகிதம் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்வர். மாப்பிள்ளை புத்தாடை புனைந்து அங்கு இருப்பார். நண்பர்களும் உறவினர்களும் அங்கு காணப்படுவர். மாப்பிள்ளை அழைத்து வரப்பட்டு நிக்காஹ் நடைபெறும். பதிவுக்காரர் பதிவு செய்வார். ஆலிமு நிக்காஹ் வைபவத்தை நடாத்திவைப்பார். கல்யாணம் பேசும் போது தீர்மானிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் பள்ளி புத்தகத்தில் பதிவு செய்யப்படும். பின்னர் மணமகன் முதலில் ஆலிமுக்கும் பின்னர் பெண்ணின் தந்தைக்கும் சலாம் கொடுப்பார். வைபவத்தின் போது வெள்ளியினால் அல்லது தங்கத்தினால் செய்த கணையாழி மணமகனுக்கு அணிவிக்கப்படும். தற்போது இது கைக் கடிகாரமாக மாறியுள்ளது. வந்திருக்கும் அனைவரிடமும் சலாம் சொல்லியபின் மணமகன் பெண் வீட்டை நோக்கி அனைவரும் புடைசூழ மேளதாளம் பைத் தொலியுடன் புறப்பட ஆயத்தமாவார். இதில் மணமகன் தனது தாய் சகோதரி உறவினரிடம் விடை பெறும் நிகழ்ச்சி முக்கியமாக இடம் பெறும். அன்பளிப்புகள் இவ்வைபவத்தில் வைத்தே இடம்பெறும். பெரும்பாலும் பணமாகவே அன்பளிப்புகள் இருக்கும். ஈற்றில் ஊர்வலம் ஆரம்பமாகும்.

## கால் கழுவுதல்

மணமகன் ஊர்வலத்தில் வரும் பொழுது மச்சான் முறையான இருவர் குடைபிடித்துச் செல்வர். மணமகள் வீட்டை வந்தடைந்ததும் பெண்ணின் சகோதரர் அல்லது உறவினர் மணமகனுடைய காலை

தேங்காய்ப் பாலினாலும், நீரினாலும் கழுவி விடுவார். அவர் சுத்தமான ஒருவராக புதுவாழ்வை ஆரம்பிப்ப தற்கு இந்நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக அமையும். தனது கால்களை கழுவியவருக்கு தனது மோதிரம் ஒன்றை மணமகன் அணிவித்து மகிழ்ச்சி கொள்வார். சற்று நேரம் பந்தலில் தாமதித்தபின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

## தாலி கட்டுதல்

இந்த வழக்கம் இஸ்லாத்தில் இல்லாத ஒன்று. என்றாலும் நமது சகோதர சமூகத்தின ரான தமிழரிட மிருந்து பெற்ற ஒரு நிகழ்ச்சியாகவே இது கருதப்படு கின்றது. கட்டாயமாக இடம் பெற்றும் வருகின்றது. மணமகனின் தாய் அல்லது சகோதரி தாலியை மண மகனிடம் வழங்க மணமகன் தாலியை மணமகளுக்கு அணிவிப்பார். அதனைத் தொடர்ந்து ஆலிமு துஆ பிரார்த்தனை செய்வார். மணவறையில் பெண்களும் மணமகனின் தகப்பன் சகோதரர் போன்றவர்களும் இடம் பெற்றிருப்பர். சிற்றுண்டி வைபவத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெறும்.

## வாழ்த்துக்கள்

மணவறை சோடித்து அதில் மணமக் களை வைத்து ஏழு இரவுகள் வாழ்த்துகின்ற ஒரு வைபவம் மிக சிறப்பாக நடைபெறும். கொட்டு முழக்கம் குரவை வெடியும் மணமகன், மணமகள் கரங்களில் இருக்கும் பொருட்களை சொட்டுவதும் பெரும் மகிழ் ச்சியான நிகழ்ச்சியாகக் காணப்படும்.

## கால்மாறிச் செல்லல்

மணமகளில்லத்தில் ஏழு நாட்கள் கழித்த பின்னர் மணமகனின் உறவினாகள் வந்து தண்ணீர் வார்த்து மணமக்களை அழைத்துச் செல்வர். இதுவும் ஒரு சந்தோசமான நிகழ்ச்சியாகசேவ இடம் பெறும். குரவை இடுதல் விசேசமாக இந்நிகழ்ச்சியில் இடம் பெறும். கால்மாறிச்சென்று ஒரு தினத்தின் பின்னர் மணமகள் வீட்டுக்கு தம்பதிகள் சென்று விடுவர். இதன் பின்னர் மணமகன் தனியாகவும் தம்பதிகளா கவும் உறவினர் வீடுகளுக்குச் செல்வர். விருந்து பசாரமும், அன்பளிப்புகளும் அவரவர் தகுதிக் கேற்ப நடைபெறும். பெண் வீட்டார் சுவையான பலகாரங் களை தம்பதி மூலம் அனுப்பிவைப்பர்.

உண்மையிலேயே அன்று வாழ்ந்த மக்கள் கல்வி அறிவில் குறைந்து காணப்பட்டாலும், கபட மற்ற வர்களாக சூதுவாது அற்றவர் களாகக் காணப் பட்டதால் இந்த நடைமுறைகளை வெகு விமரிசை யாகவும் சிறப்பாகவும் கடைப்பிடித்து வாழ்ந்து வந் தனர், ஆனால் இன்றோ! ◆

## பிரதேச நூல்கள்

| | | |
|---|---|---|
| புதிய தலைமுறை | - நாவல் | - வை.அஹ்மத் |
| தரிசனங்கள் | - குறுநாவல் | - வை.அஹ்மத் |
| முக்காடு | - சிறுகதைத்தொகுதி | - வை.அஹ்மத் |
| வாழைச்சேனை ஒரு வரலாற்றுக் | குறிப்பு வரலாறு | - வை.அஹ்மத் |
| வழியும் மொழியும் | - ஆய்வு | - வை.அஹ்மத் |
| மக்கத்துச் சால்வை | - சிறுகதைத்தொகுதி | - எஸ்.எல்.எம்.ஹனீபா |
| காணாமல் போனவர்கள் | - கவிதைத்தொகுதி | - அஷ்ரப் சிஹாப்தீன் |
| நினைத்தழுதல் | - சிறுகதைத்தொகுதி | - ஓட்டமாவடி அறபாத் |
| எரிநெருப்பிலிருந்து | - கவிதைத்தொகுதி | - ஓட்டமாவடி அறபாத் |

# எமது உயிரின் உயிருக்குயிரான தலைவரே

எம்.என்.தஸ்னீம் பானு 7 C
பாத்திமா பாலிகா மகா
வித்தியாலயம்.



எண்ணச் சுவர்களில் சிதைவுகள் தந்த
அன்பெனும் ஆணிவேர் உசுப்பி
அறிவின்கிளைகளில் நிரந்தரக்
கண்ணீர் வைத்து போனவனே..

எமது உயிரின் உயிருக்குயிரான
அமைச்சரே அஸ்ரஃபே...

காணாமல் போன எம்மைக்
கண்டெடுத்து மீட்டெடுக்காமல்
எம்மில் காணாமல் போன
உன்னைத்தேடிக் கொண்டிருக்கிறோம்

பணத்துக்கும், பதவிக்கும் ஆசைப்படாது
முன்நின்று உழைத்த எம் தலைவரே

நாமாகிட்ட நாளையும் நீயையும்
நண்பர்களாக்கி நொடிகளை
வாழ்வித்தபடி ஆட்சிக் கட்டிலில்
அமர்ந்தவனே ...

மார்புக்குள் நெஞ்சில்லா
மடச்சமுகம் அழித்தொழிக்க
மரச்சின்னத்தோடு வந்தவனே ...
நீமரம் தரித்த போனமாயமென்ன?

மலைத்தொடர்கள் தொப்பியணிந்திருந்த
பனிப்போர்வைக்குளிரில் வெடவெடத்துக்
குளிர்காய வந்த நெருப்போ
உனை உருமாற்றிப் போனது? சொல்

ஒப்பில்லாச் செப்பமொன்று
உடம்பணிந்துவந்த மாதிரி
கண்டவுடன் கைகூப்பிக்
கட்டளையிடும் கம்பீரக்
களை கனிந்த முகம்

பளிச்சுப் பளிச்செனப்
பழுதில்லாப் பேச்சு

அழுக்கறியா அகம், புறம்
முழுதும் பளிங்கைத்
தோற்கடிக்கும் பளபளப்புத்
தூய்மை

எல்லாம் மறக்கடித்துப்
போனவனே
நீ போயிருக்கலாம்
வல்லநாயன் வகுத்த வழியே.
நீ போயிருக்கலாம்
ஆனால் - நீ
எம் ஞாபகங்களையும்
எடுத்துப் போயிருக்கலாம்

வேர் ஆகிப் போகவேண்டிய
நீயோ வேறாகிப்போனாய்
எம் வழி நெடுகவும்
வழுக்குச் சேறாகிப் போக

இனி
தின்பதை உணவென்பார்கள்
திளைப்பதை நுகர்வென்பார்கள்
வாழ்க்கைக்கு வியர்க்கும்

சப்தத்தை இசையென்பார்கள்
ஆசையை அன்பென்பார்கள்
வாழ்க்கைக்கு வியர்க்கும்

பிழைப்பதை வாழ்வென்பார்கள்
எல்லாமே என்தென்பார்கள்
வாழ்க்கைக்கு வலிக்கும்

சாதிகளில் ஆனசமுதாயம் கட்டி
மதங்களால் ஆன மானுடம் நடித்து
தங்கள் கூத்தைதாமே ரசிப்பார்கள்

எப்படியோ நீயில்லாததில்
கனாக்களைத் தின்று விட்டு
இராக்களை விழிப்பார்கள்

அந்த நேரமெல்லாம்
எம்மோடு சேர்ந்து
வாழ்க்கைக்கும் சுரக்கும்
கண்ணீர் !

# வை. அஹமதின் இலக்கியப்பணி

திருமதி பிதாயா ரி. ஹரான்

மனித செயற்பாடுகள்யாவும் மனித குலத்திக்கு பணியாற்றுவனவாகவே அமைந்தாக வேண்டும். அதாவது கலையும் அத்தியாவசியமான ஏதோ ஒரு நோக்கத்திக்காக பயன்படுவதாகவே இருக்க வேண்டிமே தவிர பயனற்ற வெற்றுக் கேளிக்கையாக இருக்க முடியாது என்று கலையும் வாழ்க்கையும் என்ற நூலில் 'பிளேகானவ்' என்பவர் எடுத்துக் கூறியுள்ளார். அது எழுத்தாளனை சமூக பிரக்ஞை உள்ளவனாக இருத்தல் வேண்டும் என்பதை குறித்து நிறகின்றது. எனவே இலக்கியமும் சமூக பிரக்ஞை கொண்டதாகவே இருத்தல் வேண்டும். இத்தகைய ஒரு தேவையை வை. அஹ்மதின் படைப்புக்கள் நிறைவேற்றுகின்றன. அதாவது இவரின் படைப்புக்கள் மனித நேசிப்பின் படப்பிடிப்புகளாகவே வெளிவந்துள்ளன. அத்தகைய சமூக நேசிப்புக்கள் ஒவ்வொன்றும் சமூகத்துக்கு ஏதோ ஒரு வகையில் பயனுடையதாகவே காணப்படுகின்றன.

இந்த வகையில் ஈழத்து இலக்கிய கர்த்தாவான மறைந்த பிரபல எழுத்தாளரான வை. அஹ்மத் அறுபதுகளின் பிந்திய அரைப்பகுதியிலிருந்து தொன்னூறுகள் வரை இலங்கை வாசகர்கள் மத்தியில் மாத்திரமன்றி தமிழ் நாட்டு வாசகர்கள் மத்தியிலும் அறியப்பட்ட ஒருவராவார்.

1967இல் இளம் பிறையில் வெளியான 'அடித்த கரங்கள்' எனும் சிறுகதை மூலம் கலை உலகிக்கு தன்னை நுழைத்துக் கொண்டது முதல் சிறுகதை, நாவல், குறுநாவல், உருவகக்கதைகள், கவிதை, திறனாய்வு கட்டுரைகள் என தனது படைப்புக்களின் பரப்பை அகல விரித்துக் கொண்டு சென்று சென்று தமிழ் இலக்கியத்தை சிறப்பாக்கியவர்

## பிறப்பும் கல்வியும்.

வை. அஹ்மத் இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை என்னும் கிராமத்தில் யாசின் பாவாவுக்கும் சுலைஹா உம்மாவுக்கும் 1945 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆந் திகதி மகனாகப் பிறந்தார். வறிய குடும்பத்தில் பிறந்து இவரது தந்தையும் தாயும் சாதாரண மனிதர்களாகவே வாழ்ந்தனர். அதனால் இவர்களின் குடும்பம் வறுமை பற்றாக்குறை என்பவற்றோடு போராடியே வாழ்ந்தது.

இவ்வாறு எளிமையாகத் தொடங்கிய இவரது வாழ்க்கையில் 1951ஆம் ஆண்டு கல்வி கற்பதற்கான வயதெல்லையை அடைந்தார். அதனால் வாழைச்சேனை அரசினர் கலவன் பாடசாலையில் பாலர் வகுப்பில் சேர்க்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து ஓட்டமாவடி சிரேஷ்ட பாடசாலை சேர்ந்து சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடைந்தும் பொருளாதார வசதியின்மையின் காரணமாக தனது படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்ப்பட்டது.

படிப்பை இடைநிறுத்தியதன் பின்னர் தொழில் தேடும்படலம் ஆரம்பமானது. 1963ஆம் ஆண்டு மாணவ ஆசிரியர்கள் தெரிவுக்கான தேர்வில் தமிழ் மொழிமூல பரீட்சாத்திகளில் முதலாவதாக தேறினார். அதனால் அவர் படித்த பாடசாலைக்கே முதல் நியமனம் கிடைத்தது. பின் பயிற்றப்பட்ட ஆசிரியனார். அதன் பின் 1968ஆம் ஆண்டு ஒரு கலைப் பட்டதாரியானார். அதனை தொடர்ந்து ஓட்டமா வடி மகாவித்தியாலத்தில் அதிபராகக் கடமைபுரிந்தார். பின்பு 1980 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பட்டமேற்படிப்பு கல்வி டிப்ளோமாவைப் பெற்றார் இதன்நிமித்தமாக 1982ம் ஈண்டு பதவி உயர்வு பெற்று மூதூருக்கு வட்டாலக்கல்வி அதிகாரியாகச் சென்றார். அதனைத் தொடர்ந்து வாழைச்சேனைக் கோட்டக் கல்வி ஆலுவலகத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமை புரிந்தார். இவ்வாறு அவரது தொழில் பல இன்னல்களுக்கு மத்தியில் சமூகத் தொண்டு செய்வதாகவே அமைந்திருந்தது.

## இலக்கியப் பணி

'எழுத்தாளன் ஏக தலைவன் மாதிரி அவர்கள் எந்த வாத்தியாரையும் வைத்துக் கொண்டும் தங்கள் தொழிலை கற்றுக்கொண்டதுமில்லை அதேபோல் எந்த ஒருவருக்கும் இவர்கள் வாத்தியாராக இருந்து கற்றுக் கொடுக்க விரும்புவதுமில்லை.'

காண்டலே அனுபவம் என்பதற்கொப்ப தனது வாழ்வில் ஏற்படும் பதிவுகளை இலக்கியமாக எழுத்தில் வடிப்பவனே உண்மையான இலக்கியவாதியா வான். அவனே வரலாற்றில் தடம் பதித்துச் செல்லக் கூடியவ னாகவும் இருப்பான். இந்த வகையில் வை. அஹ்மதும் இலக்கிய வரலாற்றில் ஓர் அழியாப் புகழைப் பெற்றுத் திகழ்கின்றார் என்றால் அது அவரது முற்போக்கு சிந்த னையால் அமைந்த இலக்கியங்களே தனது கொள்கை களையும் இலக்கியங்களையும் எண்ணத்தில் வைத்து, சமூகத்தை கட்டியெழுப்பியது மட்டுமன்றி எழுத்துரு விலும் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

## அவரது ஆக்கங்கள்

- ஏழைகளின் வாழ்வில் நிலை கொள்ள மறுக்கும் பணத்தினால் ஏற்பட்ட வறுமை
- செல்வந்தர்கள் அரசியல் தலைவர்களின் மனிதாபிமானம் மற்ற செயல்
- ஆண் பெண் உறவுகளும் அவற்றில் ஏற்பட்ட விரிசல்களும்
- சர்வதேசப் பிரச்சினை
- தத்துவம்
- இனப் பிரச்சினை
- உருவகம்
- வரலாற்றாய்வு
- நயத்தல் (திறனாய்வு)

என சமூக நேசிப்பின் படப்பிடிப்புக்களாக விளங்குகின்றன.

தந்தையாரின் உதவியினால் நூல் வாசிக்கும் பழக்கம் பெற்றவை. அஹ்மதீன் எழுத்துப்பணியானது மாணவப் பருவத்திலேயே தொடங்கியது. 1959ஆம் ஆண்டு அகில இல்ங்கை சாகித்திய விழாவையொட்டி நடைபெற்ற அகில இலங்கை கட்டுரைப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் பரிசைத் தனதாக்கிக் கொண்டார் . இதனைத் தொடர்ந்து இவரது எழுத்துப் பணியானது தொடங்களாயிற்று.

## சிறுகதை

பொதுவாக வை.அஹ்மதின் சிறுகதைகளில் சமுதாயப் பிரச்சினை பேசப்பட்டிருப்பதானது அதன் சிறப்புத் தன்மையை வலுப்படுத்துவனவாக அமைந்து உள்ளன.

நாட்டின் முன்னேற்றத்திற்காக தம்முடலை சாறாகப் பிழிந்து உழைக்கும் தொழிலாளர்கள் சமூகத்தின் மிகவும் அடிமட்டத்தில்தான் இருந்தார்கள். இன, மத, மொழி பேதங்கள் கடந்து முதலாளி என்ற அந்தஸ்துகள் ஒன்றிவிட்ட எசமானர்களுக்கு சுகவாழிவு தேடிக்கொடுத்த அவர்களது வாழ்க்கை வறுமையின் கோரப்பிடியில் அகப்பட்டுத் தத்தளித்தது. ஒழுங்காக உண்ண உணவு இன்றி உடுக்க உடையின்றி இருக்க இடமின்றி வறுமையில் தவிக்கும் அவர்களது உழைப்பு கடன் வட்டி என்ற பெயர் களில் முதலாளிகளால் சுரண்டப்பட்டது. இவ்வாறான தொழிலாளர்களின் பிரச்சினைகளை வை. அஹ்மதின் பல சிறுகதைகள் சித்தரிக்கின்றன.

எடுத்துக்காட்டாக 'நிறங்கள்' என்ற சிறு கதையில் வரும் சின்னவன் என்ற பாத்திரம் தன்னு டைய பிள்ளைக்கு சுகம் இல்லை என்றும் மருந்து வாங்க பத்து ரூபா தேவைப்படுகிறது என்றும் முஸ்தபா ஹாஜியாரிடம் பணம் கேட்கிறான். அதற்கு அவர் உடனே காசைக் கொடுத்துவிடாமல் பல்வேறு சாக்குப் போக்கு சொல்லி அன்று முழுவதும் அவனிடம் அதைச் செய் இதைச்செய் என்று வேலை வாங்கிக் கொண்டி ருக்கும் சந்தர்ப் பத்தில் சின்னவனின் மகன் வந்து கண்களில் கண்ணீர் மழ்க 'வாப்பா தங்கச்சி மௌத்தா போயிட்டா' என்று மகன் கூற காலில்பட்ட அடிகூடத் தெரியாமல் அதிர்ச்சியில் பணத்தைக்கூட எடுக்காமல் ஓட்டமாகப் பறந்தான்.

மேலும் இவரின் சிறுகதைகள் சமூக அநீதிக ளையும் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. அதாவது இளம் பெண்ணின் இளமைத் துடிப்புக்கள் வயோதிபர் களால் வஞ்சிக்கப்படுவதை 'உப்புக் கரித்தது' என்ற சிறுகதைகளில் 'அவர் கடக்கண்ணால் பார்க்கிறாள் தொப்பிய களட்டி கட்டில வைக்கிறாரு. அட அல்லாஹ் இந்த மனிசனுக்கு தலையெல்லாம் நரைத்துப் போச்சு எனக்கு கண்ணால தண்ணீர் வருவுது வந்து வாயுக் குள்ள போயிட்டு போல உப்பு கரிக்குது'. இவ்வாறாக முப்பதற்கும் மேற்பட்ட சிறுகதைகளில் பொதுவாக யதார்த்தப் பண்புகளையும், மண் வாசனையையும் தவழ விட்டிருப்பதை அவதானிக்கலாம்.

## 'நாவல்'

இலக்கிய கலைகளுள் நாவலுக்குரிய தனிச் சிறப்பு பிற கலைகளுக்கில்லாத வாழ்க்கையோடு

நாவல் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு எனலாம். நாவலைப் போல் வாழ்க்கையை பாதிக்க வல்ல வாழ்க்கையோடு உரிமையும் உறவும் கொண்டாட வல்ல பிற கலைவடிவம் இல்லை என்றே கூறலாம். இது பற்றி டீ.எச்.லாரன்ஸ் கூறுகையில் 'ஒரு துறவியாய் இருப்பதைவிட ஒரு விஞ்ஞானியாய் இருப்பதைவிட ஒரு தத்துவ ஞானியாய் இருப்பதைவிட ஒரு கவிஞனாய் இருப்பதைவிட நாவலாசிரியராய் இருப்பதில் நான் உயர்வு மனப்பான்மையை உணருகிறேன். கலைகளுள் வாழ்க்கையை ஆழமாக பாதித்து அழகுற சித்தரிக்கும் காலை நாவலேயாகும்.

சமுதாயத்தை பிரதிபலிக்கும் இலக்கிய வடிவங்களுள் இன்று வளர்ச்சி அடைந்திருக்கும் எல்லா உலக மொழிகளிலும் கொடிகட்டி பறந்து கொண்டிருப்பது நாவல் இலக்கியமே. ஏனைய இலக்கிய வடிவங்களைப்போல் நிலையான வரையறைகள் இல்லாவிட்டாலும் இதற்கு சில பொதுவான வரையறைகளையும் உத்திகளையும் பயன்படுத்தியே வை.அஹ்மத் தனது நாவல்களைப் படைத்துள்ளார்.

வை.அஹ்மத் 1976.01.08இல் வீரகேசரி வெளியீடாக வந்த 'புதிய தலைமுறைகள்' (சாகித்திய மண்டல பரிசு) என்ற நாவலைத் தொடர்ந்து 'கிராமத்துப் பெண்', 'முடிவுகள் நிச்சயமானதல்ல', மறுபடியும் அவள்' மற்றும் 'தரிசனங்கள்', 'நிகழ்வின் நிழலில்' என்ற இரு குறு நாவலையும் எழுதியுள்ளார்.

வாழைச்சேனைப் பிரதேசத்தை இலக்கிய களமாகக் கொண்டு வை.அஹ்மத் தனது முதலாவது நாவலைப் படைத்துள்ளார். அதில் முஸ்லிம்களின் இஸ்லாமிய விதிமுறைகளுடன் பிணைந்த வாழ்வை வெளிப்படுத்தியுள்ளார்.

'புதிய தலைமுறையில்' பழைய அரசியல் வாதிகளின் போலித்தனம் இளைஞர்களின் எழுச்சியினால் முறியடிக்கப்படுவதை யதார்த்தமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

'இதுவரைகாலமும் சபைக்கு உங்களைப் போல ஆக்களத்தானே கிராம சபைக்கு அனுப்பினோம் நம்முடைய பகுதிக்கு அவர்களால் ஒன்றும் நடக்கவில்லையே பொதுச்சபைக்கென்று உங்களுக்கு பள்ளிவாசல் இருக்கிறது. அதனால் தான் இளைஞர்கள் இந்தமுற கிராம சபைக்கு அனுப்புவது நல்லதென்று நாங்க யோசிக்கிறோம்.'

அடுத்து அவரின் 'கிராமத்துப் பெண்' என்ற நாவல் முற்றிலும் ஒரு வித்தியாசமான போக்கினை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அதாவது படிப்பை இடைநிறுத்தி ஒரு வீட்டிலிருக்கும் ஒரு கிராமத்துப் பெண் ஓர் ஆசிரியரின் உதவியுடன் படித்து உயர்வடைவதையும் சமூகத்தின் முன் அவள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் இடத்தில் ஆசிரியர் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை,

“உங்களுடைய நல்ல தன்மைகள் எல்லோருக்கும் வராததுதான் ஆனால் உங்களைப் போன்ற பெண்கள் சமுதாயத்தக்கு தேவை அப்படிப்பட்ட பெண்களை கல்வியறிவு ஊட்டுவதன் மூலம்தான் உருவாக்க முடியும் கல்வி அறிவற்ற மூடப் பெண்கள் இல்லாததையும் பொல்லாததையும் கூறும் போது அவர்களுக்கு அதனால் விளையப் போகும் வாகம் தெரிய வராது.”

அறிவு பூர்வமாக எடுத்துக்காட்டும் விதம் நயக்கத்தக்கது. இவ்வாறாக வை.அஹ்மதின் ஏனைய நாவல்களும் சமூகத்தின் பிரச்சினை பற்றியே பேசபவனாக உள்ளன.

அடுத்து அவரின் குறுநாவல்களின் பக்கம் பார்வையைச் செலுத்தினால் 'நிலவின் நிழலில்' என்ற குறுநாவல் 1968ஆம் ஆண்டு வீரகேசரி ஜோதியில் தொடராக வெளிவந்தது.

இது வாழைச்சேனை கிராமத்து மீனவர்களை கதாபாத்திரமாக கொண்டு எழுதப்பட்டுள்ளது. அத்துடன் முஸ்லிம்களின் மரபு மீறா வாழ்க்கை முறையிலான பின்னணியாக கொண்டதோடு மட்டுமல்லாமல் அன்றாடம் மனிதனிடம் ஏற்படும் பிரச்சினைகள் போட்டி பொறாமை என்பவற்றோடு விரசமில்லாத காதலும் இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

நினைவின் நிழல்தான் நிலவின் நிழலாக படர்கிறது. நிலவைப் போல தெளிவான வெண்மையான அழகிய கடலோர கிராமிய வாழ்வை ஆசிரியர் அழகியல் உணர்வோடு எடுத்துக்காட்டும் நயக்கத் தக்கதாகும். அடுத்து 'தரிசனங்கள்' என்ற மற்றொரு குறுநாவலையும் (1992) இவர் படைத்துள்ளார். இதில் கணவன் - மனைவி ஆகிய இருவருக்குமிடையிலான பொருந்தா தன்மையை மிகத்துள்ளியமாக எடுத்துக் காட்டுகின்றார்.

எனவே வை. அஹ்மத் தன் நாவலின் மூலம் தான் வாழ்ந்த சமூகத்தின் நிலையினை மண்வாசனை கமழும் கிராமியச் சொற்களை அலாதியாக கையாண்டு படைத்ததோடு முஸ்லிம்களுக்கே உரிய தனித்துவத் தினையும் எடுத்துக்காட்டினார். இது ஈழத்தின் 1970க்குப் பிற்பட்ட நாவல்களின் ஒரு சமுதாய மயப்பட்ட போக்கினை கொண்டமைந்துள்ளது என்று கூறினால் அது மிகை யாகாது.

## கட்டுரைகள்

தனது பதினேழாவது வயதில் கட்டுரையின் மூலம் இலக்கிய உலகிக்குள் பிரவேசித்த வை.அஹ்மத் பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் பல்வேறு ஆக்கங்களை எழுதியுள்ளார். இவைகளுள் கட்டுரை களும் உள்ளடங்கும்.

இவர் தனது கட்டுரைகளை இலக்கியம் சிந்தனைகள் பிரயாணம் என்ற பெரும் பிரிவுக்குள் உள்ளடக்கி மொழியும் விழியும் என்ற தலைப்பில் ஒரு தொகுதியாக வெளியிட்டுள்ளார்.

இலக்கியம் என்ற பகுதியில் கிழக்கிலங்கை முஸ்லிம் கவிஞர் தரும் சிந்தனைகள் பற்றிய ஆய்வா னது யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்ட மேற்படிப் புக்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையிலிருந்து எடுக்கப் பட்டது என்பது சிறப்பான அம்சமாகும். அத்தோடு சிந்தனைப்பகுதிகள் ஆசிரியரின் உளவியல் சார்ந்த புலமைக்கு சான்றுபகர்வதாகவம் பிரணாயம் என்ற பகுதி தான் அடைந்த மன் உழைச்சலைப் போக்க இந்தியா சென்றிருந்த போது கோவளத்தைப் பற்றிய மனப்பதிவுகளை வாசகர்களும் நயக்கக் கூடிய விதத்தில் படைத்திருக்கின்றார்.

## ஏனைய துறைகள்

பொதுவாக சொல்லப் போனால் தனது பார்வையை அகல விரித்துக கொண்டவர் என்றே கூறவேண்டும்.

வரலாற்றுத் துறையில் 'வாழைச்சேனை ஒரு வரலாற்றுக் குறிப்பு' என்ற நூலை எழுதி (1992) எல்லோராலும் விதந்து போற்றப்பட்டார்.

மற்றும் 'ஒரு சாதாரண மனிதனின் கதை' என்ற மகுடத்தில் தனது வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை என்னென்ன நிகழ்வுகள் நடந்தனவே அத்தனையுந் சுயசரிதையாக எழுதியுள்ளார்.

மேலும் "19ம் நூற்றாண்டில் இலங்கை இஸ்லாமியச் சமுதாய வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்களிப்பு" என்ற தலைப்பில் 1979ஆம் ஆண்டு நான்காவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் ஆராய்சச்சிக் கட்டு ரையையும் சமர்ப்பித்தார். அத்தோடு புரட்சிக் காமால் கவிதைகள் ஒரு நோக்கு என்ற நூலையும் எழுதினார்.

இவர் தனது அந்திம காலப் பகுதியில் திறனாய்வுத் துறையிலும் நாட்டம் செலுத்தி இருந்தார் என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

ஒட்டு மொத்தமாக அனைத்துப் படைப்பு களினூடாகவும் பார்க்கும் போது ஈழத்து எழுத்தாளர் மத்தியில் ஒரு தனியான இடத்தில் வைத்து நோக்கப் பட வேண்டியவர் வை.அஹ்மத் என்று கூறினால் அது மிகையாகாது.

1992இல் முஸ்லிம் சமய கலாசார பண் பாட்டலுவல்கள் அமைச்சு நடாத்திய வாழ்வோரை வாழ்த்துவோம் இரண்டாம் விழாவில் 'தாஜுல் அதிப்' என்ற பட்டமும் இலக்கிய கர்த்தாக்கள் வழங்கிய 'இலக்கிய வேந்தன்' என்ற பட்டத்தையும் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்கினார்.

1992இல் மறைந்த கலைஞர் இறந்தும் இறவாப் புகழுடன் எம்மனங்களில் வாழ்ந்து கொண் டிருக்கின்றார்.◆

# அழகுராணி

ராஜாத்தி

"அழகுராணி செத்துப் பொயிற்றாள்"
"ஆரு அழகுராணி"
"அவள்தான் அந்த பைத்தியக்காரி"
"அழகராணி செத்துக் கிடக்காள்"
"எந்த அழகுராணி"
"அவள் தான் அந்த பிச்சைக்காரி"

"எப்படி"
"ஆத்தில் விழுந்து செத்துப் பொயிற்றாள்"
"ஏன் செத்தாள்" ..................

"அழகுராணி" அப்படித்தான் அவளை எல்லோரும் அழைப்பார்கள் அழுக்கு நிறைந்ததாய் ஒரு சட்டை உடுத்தி அதன் மேல் ஒரு சேலை சுற்றியிருப்பாள் அதுவும் அழுக்கு தான். பல நாட்களாய் சீவிக்கட்டாத தலை முடியை அழுக்கு நிறைந்த ஒரு சீலைத் துண்டால் கட்டியிருப்பாள் அவை மட்டும் தான் அவளது சொத்துக்கள்.

அண்டைக்கொருநாள் அவள் வந்தாள்
"அழகுராணி"..... "அழகுராணி" வீதியில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறுவன் அழைத்தான்

வந்ததே கோபம் அவளுக்கு....... கீழ கிடந்த கல்லை எடுத்து அந்தச் சிறுவன் மீது வீசினாள்

"சனியன்... கோதாரி.... ஹறாமுல புறந்தது...... உண்ட உம்மாவ கூப்புடண்டா களிசற" வாய்க்கு வந்த படியெல்லாம் திட்டினாள்

அழகுராணி என தன்னையாரும் அழைப்பதில் அவளுக்கு இஸ்ரமில்லை.



கேலிக்குத் தான் அப்படி அழைக்கிறார்கள் என்பது அவளுக்கு தெரியும் கேளியும் கிண்டலும் நிறைந்த வாழ்வுடன் போராடி வாழப்பழகிக் கொண்டாள் அவள்.

அவளை யாரும் அழகுராணி என அழைத்து ஆத்திரப்படுத்தாதவரை அவள் வைத்தியக்காரியல்ல...

அன்பானவள், வாழ்வை ரசிக்க ஆசைப்படுபவள். தனது கஸ்ரத்தை பிறருடன் பரிமாறிக் கொள்ள விரும்புபவள் ஆனால் எல்லோர் பார்வையிலும் அவள் ஒரு பைத்தியக்காரி.... அவள் ஒரு பிச்சைக்காரி.

இடது கையை இறுகப் பொத்தியிருந்தாள் அதற்குள் அனேகமாக கொஞ்சம் சில்லறைக் காசிருக்கும், மறுகையில் ஒரு பாண் துண்டு. எவரையும் பொருட்படுத்தாமல் சேலையை தூக்கி கமுக்கட்டுக்குள் இடுக்கிக் கொண்டு பாணைக் கடித்தபடி வந்தாள். மழை பெய்யத் தொடங்கியது ஆனால் அவள் அதை பொருட்படுத்தவில்லை.

எனது கேற்றில் தட்டினாள்
"என்னெண்டாலும் தாங்க"
"அந்தச் சனியனுகள் இப்படித் தான் ஒரே தன குறவனுகள்...... அதுகளிட்ட நான் என்ன கேட்டேனோ தெரியா..... வம்புக் குட்டியள்....... இந்த அல்லாஹ் என்னத்தப் பாத்திற்றிருக்கானோ தெரியா....... எனக்கு கெதியா மவுத்தத்தராம" தனக்குள் தாளே மனவேதனைப்பட்டுக் கொண்டாள்.
"என்னெண்டாலும் தாங்க சுறுக்கா போகணும்"
மீண்டும் கேற்றைத் தட்டினாள்.

"மழை தூறுது உள்ளே வா" அழைத்தேன், கேற்றைத் திறந்து வந்து தாவரத்தில் நின்றாள்" "தூவானம் அடிக்குது உள்ள வந்து இரு"... உள்ள இருக்க

பயம் பாம்பு வரும்" என்று சொல்லிக் கொண்டே படிக்கட்டில் இருந்து கொண்டாள்.

காதிடுக்கில் செருகியிருந்த பீடித் துண்டை எடுத்து வாயில் வைத்து புகைத்தாள்.

அவளுக்கு அதுவும் பழகி விட்டது போல,

"பாம்பு வருமா? ஏன்? நான் கேட்டேன்.
"நான் ஊட்டையும் உள்ளுக்குள்ள போறல்ல பின்னால வந்து பாம்ப விடுறவனுகள்.........

மழை வந்தாத்தான் கரைச்சல்" சாதாரணமாகவே சொன்னாள்

"ஆரு உள்ளுக்கு பாம்ப விடுற"
"அங்க இருக்கானுகள் ரெண்டு மூன்று களிசறைகள் அவனுகள் தான்" அருவருத்துக் கொண்டே சொன்னாள்.

"ஏன் பாம்ப உள்ளுக்க விடுற வனுகள்"

"அவனுகளுக்கு பைத்தியம்" .......
"ஏன் உன்ர வீட்டுக்காரன் எங்க"
"அந்த நாய் உட்டுத்து பொயித்து— அதுகளெல்லாம் ஒரு ஆம்புளய"
"பிள்ளைகள் இல்லையா"
"ஒரு பொடியன் அவன எண்ட உம்மா வளக்காவு"
"ஏன் விட்டுத்து போனவள்"

"உழைக்கப் போறல.... எப்பயெண்டாலும் இருந்து போட்டுப் போய் கிடைக்கிறதில கஞ்சா அடிச்சிப் போட்டு மோட்டப்பாத் துட்டு படுப்பான்........ காசு கேட்டா அடிதான்..... எண்ட நகநட் டெல்லாம் வித்து திண்டு போட்டுத் தான் ஓடினவன்."

ஒரு நாள் எண்ட தலையில கொதி தண்ணிய ஊத்தினவன் அதாலதான் எண்ட தலமயிரெல்லாம் கொட்டுப் பட்டுட்டது இஞ்சே.... தலையை குனிந்து காட்டினாள்

அவள் தலைமையிரெல்லாம் கொட் டித்தான் இருந்தது.

புகைத்துக் கொண்டிருந்த பீடியை அணைத்து மீண்டும் காதில் செரு கினாள்.

"ஏனெண்டாலும் தாங்க போகனும்" கொடுத்ததை தனது கைக்குள் பொத்திக் கொண்டு நடக்கத் தொட ங்கினாள்.

யார் சொன்னது இவளுக்கு பைத் தியம் எண்டு. அவளுக்குள்ள தெல் லாம் வாழ்க்கை மீதுள்ள வெறுப்பு. வெறுப்பாகவிருந்தாலும் வாழ வேண்டும் என்கிற விருப்பு அவளுக் குள் பொங்கியெழுகின்ற ஆசைகளை யெல்லாம் அடித்து தணிக்கும் சமூகம் மீதான வெறுப்பு.

இப்படித்தான் எனக்குப்பட்டது இது உங்களுக்கு பைத்தியக்காரத் தனமாகவும் படலாம்.

மழை கனத்தது சேலைத் தலைப்பை தலையில் பிடித்துக் கொண்டு போனாள்

"ஒரு சிறு கோடாய்"
"ஒரு புள்ளியாய்"
"ஈற்றில் மறைந்து போனாள்"

"அழகுராணி செத்துப் பொயிற்றாள்
'ஆர் அந்த அழகுராணி'

"அவள்தான் அந்த பைத்தியக் காரி"
"அழகுராணி செத்துப் பொயிற் றாள்"

"எந்த அழகுராணி"

"அவள்தான் அந்த பிச்சைக்காரி"
அழகுராணியைத்தான் எப்போதோ நாம் கொலை செய்து விட்டோமே.

※

**மலரில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு**

※

# கல்குடா முஸ்லிம்களின் கிராமிய வைத்தியப் பாரம்பரியம்

அகமட் லெப்வை மீர்முகம்மட்

இலங்கையில் கிராமிய வைத்தியம் தொண்மையான வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டது. தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஆங்கில மருத்துவ முறை எவ்வளவுதான் அபிவிருத்தி அடைந்துவந் தாலும் கிராமிய மருத்துவ பாரம்பரியத்தை உதறித் தள்ளிவிட முடியாத அளவு அது மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளது. இதனால் அதனை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் பல்கலை க்கழக மட்டங்களில் கூட கவனம் செலுத்தப்பட்டு வரு கின்றது. இலங்கையில் கிராமிய மருத்துவப் பாரம்பரியத்தைகாக்கவும் வளர் க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இதற்காக சுதேசவைத்தியத்துறை அமைச் சுக்கூட இயங்கிவருவதை காண்கின்றோம். முஸ்லிம் கள் வைத்தியத்துறையில் வரலாறு படைத்தவர்கள் மேலெழுந்த வாரியாக அவர்களது பணிகள் இன்று உலகிற்கு தெரியாவிட்டாலும் உள்ளார்ந்த ரீதியில் கிராமிய வைத்தியத்துறை வளர்ச்சிக்கு குறிப் பிடத்தக்க பங்கையாற்றி வருகின்றார்கள். இலங் கையின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் கிராமிய வைத்தியர்களின் பெருக்கம் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு. இந்த வகையில் கிராமிய வைத்தியத்துறை யில் கல்குடா முஸ்லிம்கள் ஆற்றிவரும் பங்கு பற்றி மட்டும் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

கல்குடா தொகுதி முஸ்லிம் கிராமங்களில் ஏராளமான கிராமிய வைத்தியர்கள் வாழ்ந்து மறைந் துள்ளார்கள். பிரதேச மக்களின் உடல் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அவர்கள் பெரிதும் பங்காற்றியவர்கள். இன்றைய இளம் தலைமுறைக்கு அவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லாதுள்ளது. கல்குடா முஸ் லிம் கிராமிய வைத்தியர்களுள் மர்ஹூம்களான கரவா கர்ர மகன் ஆதம்பாவா பரிசாரி (ஓட்டமாவடி) வெள்ளத் தம்பி பரிசாரி (ஓட்டமாவடி) கலந்தர் பாவா பரிசாரி (ஓட்டமாவடி) அச்சி முஹம்மது பரிசாரி (வாழைச் சேனை) இலவத்தம்பி பரிசாரி (மீராவேடை) டைலர் பரிசாரி (ஓட்டமாவடியில் வாழ்ந்தவரும் மருத முனையை பிறப்பிடமாகக் கொண்டவரும்) முதலானவர்கள் குறிப் பிடத்தக்கவர்கள். என்னால் பெயர் குறிப்பிடாமல் விடுபட்ட இன்னும் பலரும் இருந்திருக்கிறார்கள். இவர்களது வைத்தியப் பாரம்பரியம் இவர்கள் ஆற்றிய பணிகள் எதுவும் இன்றைய தலைமுறைக்கு தெரியா மல் போயுள்ளது துதரிஸ்டமே. ஆயினும் அவர்களது பரம்பரையினர் அவர்கள் விட்டபணியை தொடர்ந்து இப் பிரதேச மக்களு க்கு சேவையாற்றி வருகின்றார்கள். இதன் தொடரில் இன்று எமது பிரதேசத்தில் வாழ்ந்து சேவையாற்றிக் கொண் டிருக்கும் சில கிராமிய வைத்தியர்களை இங்கு அறிமுகம் செய்துவிக்க விளைகின்றேன்.

## 'சித்த வைத்திய சிகாமணி' ஆதம்லெப்பை பரிகாரி

முகம்மது முஸ்தபா பரிகாரியின் புதல்வரான ஆதம்லெப்பை பரிசாரி. இவர் காத்தான்குடியை பிறப் பிடமாகக் கொண்டவர். காத்தான்குடி கிலுறியா பாட சாலையிலும் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியிலும் தனது ஆரம்பக் கல்வியை கற்று தனது தந்தையான முஸ்தபா பரிகாரி இறந்ததும் கல்வியை விட்டு தொழிலில் இறங்கினார். ஆரம்பத்தில் வியாபாரத் தொழிலில் ஈடுபட்ட இவர் அதில் பிடிப்பு இல்லாது போக தனது குடும்ப பரம்பரை தொழிலான வைத்திய தொழிலில் ஈடுபட்டார். 61 வயது நிரம்பிய இவர் கடந்த 30 வரு டங்களாக இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். 1978ல் தனது மனைவி மரணித்ததும் ஓட்டமாவடிக்கு குடியேறி வருகை தந்து மீராவோடையில் உள்ள ஏ.எல்.மரியம் வீவீ என்பவரைத் திருமணம் செய்து கடந்த 23 வரு டமாக இங்கு வாழ்ந்து வருகின்றார். அரசின் ஆயுர் வேத வைத்திய சபையினால் நடாத்தப்பட்ட பரீட்சை யில் சித்தி எய்து அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வைத் தியனாகவும் பணியாற்றி வருகின்றார். கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கத்தில் 1990ம் ஆண்டு முதல் அங்கத்துவராக இருந்துவரும் இவருக்கு 2001ல் கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கம் நடாத்திய சித்த மருத்துவன் 50ம் ஆண்டு பொன் விழாவில் 'சித்த வைத்திய சிகாமணி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஆதம்லெப்பை பரிசாரி அவர்கள்

ஓட்டமாவடி ஜும் ஆ பள்ளிவாயல் வீதியில் சுல தானியா சுதேச ஆயுல்வேத வைத்திய சாலையை நடாத்தி வருவதோடு அதில் ஆயுர்வேத மருந்துப் பொருட்களையும் விற்பனை செய்து வருகின்றார். ஓடிக்குலோன், ஓமவாட்டர், பண்ணீர் முதலியவற்றை யும் சில நோய்களுக்கான பாம்களையும் தயாரித்து வருகின்றார். "இதனை நான் தொழிலாகக் கொள்ள வில்லை என் சமூகத்திற்குச் செய்யும் ஒரு தொண்டா கவே செய்து வருவதோடு எனது குடும்ப பாரம்பரிய பணியை செய்கின்ற மனநிறைவோடும் இப்பணியில் நான் ஈடுபடுகின்றேன்" என வைத்தியர் அவர்கள் குறிப் பிட்டார்கள்.

முகவரி :

ஸுல்தானியா ஆயுர்வேத வைத்தியசாலை,
ஜும்மாமஸ்ஜித் வீதி, ஓட்டமாவடி.

## இளம் வைத்தியர் அப்துல் ரஸாக்

டைலர் பரிசாரி என அழைக்கப்பட்ட முகம் மது கஸன் பரிசாரியின் புதல்வரே அப்துல் ரஸாக் பரிசாரியாரும் 'டைலர்' பரிகாரிர மகன் என ஜனரஞ் சகமாக அழைக்கப்படும் இவ்விளம் வைத்தியர் இப் பிரதேச மக்களுக்கு நன்கு அறிமுகமானவர் 38 வயது நிரம்பிய இவர் கடந்த 16 வருடகாலங்களாக தனது தந்தை டைலர் பரிசாரி மரணித்ததைத் தொடர்ந்து இப்பணியில் ஈடுபட்டு வருகின்றார். கல்விப் பொதுத் தராதர உயர்தரம் வரை படித்தஇவர் இலங்கை ஆயுர்வேத வைத்திய சபை நடாத்திய பரீட்சையில் சித்தியடைந்து அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வைத் தியராக தொழிற்படுகின்றார். இப்பிரசேத்தில் மட்டு மல்லாது நாட்டின் பல பாகங்களிலும் பிரபலயம் அடை ந்துள்ள இவரது வைத்திய சிகிச்சையை நாடி மூவின மக்களும் வருகை தந்த வன்னம் உள்ளனர். பிரதி வெள் ளிக்கிழமை தோரும் பொலனறுவைக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு சிகிச்சை செய்து வருகின்றார் சர்வநோய்களுக்கும் சிகிச்சையளிக்கும் திறமையை உடைய இவர் இத்தொழில் மூலம் நல்ல வருமானம் கிடைப்பதாகவும் மக்கள் மத்தியில் கௌரவத்தைப் பெற்றுத்தந்துள்ளதாகவும் கூறும் அவர் இது எனது தொழில் என்பதை விட சமூகத்துக்குச் செய்யும் பெரு ந்தொண்டாகவும் எனது தந்தையின் அடிச்சுவட்டை ஒட்டி பாரம்பரியத் தொழிலை செய்வதில் எனக்கு ஆத்மதிருப்தியாகவே உள்ளது எனவும் வைத்தியர் கூறுகினறார்

முகவரி :- 131, டாக்டர் அபுல்கலாம்
ஆாத் வீதி,
ஓட்டமாவடி – 01

## 'கரவாகர் மகன்' முஹமது இஸ்மாயில் பரிகாரி

ஆதம்பாவா பரிகாரியின் புதல்வரான முஹம்மது இஸ்மாயில் பரிகாரி "கரவாகர்ர மகன்' என்ற பெயரில் இப்பிரதேசத்தில் புகழ் பெற்றவர். 50 வயது நிரம்பிய இவர் கடந்த 15 வருடங்களாக வைத்தியத் தொழில் ஈடுபட்டு வருகின்றார். கல்முனை, கரைவாகு பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட இவரது பரம்பரையினர் பல தலைமுறைகளாக வைத்தியத் துறையில் புகழ் பெற்றவர்கள். 'கரவாகர்ரமகன்' என்று அழைக்கப்பட்ட இவருடைய தந்தையும் இப்பிரதேச த்தின் புகழ் பெற்ற வைத்தியர். அப்பரம்பரையில் முஹம்மது இஸ்மாயில் பரிகாரி 11வது தலைமுறை. தந்தையின் மரணத்திற்குப் பின்னர் அவரது பாரம் பரியத் தொழிலை தனதாக்கிக் கொண்டார். இன்னும் தனது பரம்பரையினரின் மருத்துவக் குறிப்புக்கள் அடங் கிய ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து வருவதோடு, அக்குறிப்புக்களை புத்தங்களில் பிரதியும் செய்துவைத் துள்ளார். சர்வநோய்களுக்கும் சிகிச்சையளித்தாலும் கற்பவதிகளும், குழந்தைகளுமே அதிகம் சிகிச்சை பெற அவரிடம் வந்து செல்கின்றனர். 1990ம் ஆண்டு முதல் கிழக்கு மாகாண சித்த வைத்தியச்சங்கத்தில் அங் கத்தவராக இருந்தும் தற்போதே பரிகாரியார் அரச அங்கிகாரத்தைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய் துள்ளார். தனது சுயதேவையைவிட பொதுத்தேவையை மேலாகக்கருதி தான் இத்துறையில் ஈடுபட்டுள்ள போதிலும் போதிய வருமானமும் நல்ல திருப்தியும் கிடைப்பதாகக் கூறுகின்றார்.

முகவரி :

பரிகாரியார் வீதி, ஓட்டமாவடி – 03

## M.S. ஹாஜியார்

வாழைச்சேனைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முஹம்மது ஷரீப் மீராசாஹிப் பரிகாரி அவர்கள் எம். எஸ். ஹாஜியார் என்று அழைக்கப்படுபவர். தனது தந்தை மீராசாஹிப் முஹம்மது ஷரீப் வைத்தியத் துறையில் ஈடுபாடுகொண்டவராக இருந்தமையால் தனக்கும் ஈடுபாடு ஏற்பட்டு கடந்த 20 வருடகாலமாக இப்பணியில் ஈடுபட்டு வருகின்றார். ஜீ ஸீ ஈ சாதாரண தரம் வரை வாழைச்சேனையில் கல்வி இவர் இந்தியா விலுள்ள 'சித்த மருத்துவ இலக்கிய ஆய்வு மையத் தில் இணைந்து சித்த வைத்தியத்தில் சான்றிதழ் பரீட் சையில் தேறியுள்ளார். வியாபாரத்தை தனது பிரதான தொழிலாகக் கொண்டு ஒரு பகுதி நேரமக்கள் சேவை யாக தொழில் நோக்கமின்றி இப்பணியில் அவர் ஈடுபட்டாலும் தினமும் பலர் சிகிச்சைக்காக அவரிடம் வந்து செல்கின்றனர். நீரழிவு, மூலவியாதி, வெண் குஷ்டம், கழலைகளை அகற்றுதல், ஆஷ்மா, வாய்வு முதலிய வற்றுக்கு சிகிச்சையளிப்பதில் திறமையுள்ள வலாகவும் விளங்குகின்றார். அடிக்கடி பத்திரிகைக ளில் மருத்துவம் சம்பந்தமான குறிப்புக்களையும் ஆலோ சனைகளையும் எழுதிவருகின்றார். 66 வயது நிரம்பியுள்ள வைத்தியரவர்கள் தான் படிப்பால் பெற்ற தேர்ச்சியை விட அனுபவத்தால் பெற்ற தேர்ச்சி பிரதானமானதும் எனக்கு புகழைத் தேடித்தந்ததும் எனக்கூறுகின்றார்.

முகவரி :- மன்சூரா மன்சில், சுலைமான்
ஆலிம் வீதி, வாழைச்சேனை

## வைத்தியர்
## P.M. முஹம்மது அன்வர்

ஓட்டமாவடியைப் பிறப்பிடமாக கொண்ட பீர்முஹம்மது முஹம்மது அன்வர் இப்பிரதேசத்தி லுள்ள மற்றொரு இளம் கிராமிய வைத்தியர். ஓட்மா வடியில் க.பொ.த சா.தரம்வரை கல்வி பயின்ற இவர் தனது சமயக் கல்வியை பேருவலை ஜாமிஆ நளீமியாவில் கற்ற தனது தாயின் திடீர் மரணத்தால் பாதிப்புக் குள்ளாகி சமயக் கல்வியைக் கைவிட்டு மருத்துவக் கல்வியில் ஈடுபாடு கொண்டார். குறிப்பிடத்தக்கதொரு மருத்துவ குடும்ப பாரம்பரியத்தை வைத்தியர் அன்வர் கொண்டிருக்காவிட்டாலும் தனது தாயின் திடீர் மரணத் திற்கு இப்பிரதேசத்தில் வைத்தியராக தொழில்புரியும் ஒரு போலி வைத்தியரின் முறையற்ற சிகிச்சை காரணமாக இருந்ததில், இப்போலிகளின் தீங்கி லிருந்து சமூகம் பாதுகாப்புப் பெறவும், உண்மை யான சேவையை வழங்கவும் வைத்தியதுறையில் நாட்டங்கொண்டார். இலங்கை ஆயுள்வேத வைத்திய சபையின் பரீட்சைக்குத் தோன்றி 1997ம் அண்டு சித்தியடைந்ததோடு, கலந்தர் லெப்பை பரிசாரி, வெள்ளப்பரிசாரி, வைத்தியர்களான உமா மகேஸ்வரன் (யாழ்ப்பாணம்) கிருஷ்ணப்பிள்ளை (யாழ்பாணம்) ஹிசைன் (மட்டக்குளி) நடேசன் (மாத்தளை) முத லியவர்களிடம் வைத்திய ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் பெற்றார். வைத்தியர்கள் ஹிசைன், நடேசன் முதலானோரின் வழிகாட்டலில் இந்தி யாவின் பிரபல மருத்துவக் கல்லூரிகளில் ஆயுள் வேத வைத்தியம், அலோபதி வைத்தியம் முதலியன வற்றைக் கற்று டிப்ளோமா சான்றிதழும் பெற்றுள்ளார். தான் பாரம்பரிய வைத்தியக் குடும்பத்தைச் சாரா தாலும், தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளவிரும் பாததாலும் இப்பிரதேச மக்கள் மத்தியில் பெரும் பிரபல்யத்தை இவர் பெறவில்லை என்ற போதும் மிகவும் நேர்மையான முறையில் அமைதியான சூழ லில் தனது பணியைச் செய்து வருகின்றார். அதன் மூலம் எனக்கு பெரும் வருமானம் கிடைக்கவிட்டாலும், நாளாந்த ஜீவனோபாயத்தைக் கொண்டு செல்லவும் சகல தரப்பு மக்களிடமும் பழகி அவர்களுக்கு சிறித ளவு சேவையாவது செய்யவும் எனக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதையிட்டு நான் ஆத்ம திருப்தியடைகிறேன். என வைத்தியர் சந்தோசப்பட்டுக் கொண்டதுடன், சித்த வைத்தியம் பயின்ற சிலர் இப்பிரதேசத்தில் ஜனரஞ் சகமான போலி ஆங்கில வைத்தியர்களாக மாறி சமூகத்தை ஏமாற்றிப் பிழைத்துக் கொண்டிருப்பது தனக்குப் பெரிதும் கவலையாக இருக்கின்றது என மனம் நொந்து கொண்டார்

முகவரி :- மார்க்கட் ரோட்,
மீராவோடை - 05

## பரிசாரி முத்தம்மா

கல்குடா முஸ்லிம் பகுதிகளில் கிராமிய வைத்தியத் துறையில் ஆண்கள் பிரபலயம் அடைந்துள்ளது போல சில பெண்களும் முத்திரை பதித்துள்ளனர். அவர்களிலே மீராவோடைக் கிராமத்தில் எல்லோர் மத்தியிலும் 'பரிசாரி முத்தம்மா' எனப் பிரபலயம் அடைந்துள்ள அலியார்ப் போடி கலந்தர் உம்மா மிகவும் முக்கியமானவர் வைத்தியம் பாரம் பரியத்தைக் கொண்ட குடும்பத்தில் நான்காவது தலை முறையாக அவர் இத்துறையில் ஈடுபட்டுள்ளார் கடந்த சில சதாப்தங்களுக்கு முன்னர் அவரது கணவர் முஹம்மட் லெப்பை இலவத் தம்பி பெயர் பெற்ற பரிசாரியாகத் திகழ்ந்து இப் பிரதேச மக்களின் மனங்களில் இடம் பிடித்தனர் அவரது மரணத்தைத் தொடர்ந்து கடந்த 40 வருடங்களாக அவர் இப் பணியில் ஈடுபட்டு வருகின்றார் ஓலைச் சுவடிகளில் பதிவு செய்யப் பட்டு இருந்த இரவது குடும்ப பாரம்பரிய மருத்துவக் குறிப்புக்களை நூட்களில் பிரதி செய்து பாதுகாத்து வருகின்றார். இவருக்கு ஆண்பிள்ளைகள் மூவர் இருந்த போதும் அவர்கள் மருத்துவத் துறையில் ஈடுபாடு காட்டாததன் காரணமாக தமது வைத்திய பாரம் பரியத்தை பேணும் பொருட்டு தனது இளைய மகள் இலவத் தம்பி கைரியா உம்மாவை பயிற்றி வித்தும் வருகிறார். இவர் சர்வாங்க நோய்களுக்கும் மருத்துவம் செய்யும் ஆற்றல் உடையவராக இருந்த போதும் காய்ச்சல், சளி, பொருமல், குத்துக் கடுப்பு மகப்பேற்று, தலையிடி, பித்தம் முதலான நோய்களைக் குணப்படுத்த இப்பிரதேசப் பெண்கள் பெரிதும் அவரை நாடிச் செல்கின்றனர். அலியாப் போடி கலந்தர் உம்மா எழுத வாசிக்கத் தெரியாதவராக இருந்த போதும் அனுபவம் காரணமாக இந்நிலையில் தன்னை வளர்த்துக் கொண்டுள்ளார். தனது 68வது தள்ளாத வயதில் கூட மிக ஆரோக்கியத்துடன் இருக்கும் அவர் இப் பணிமூலம் தனக்கு வருமானம் ஏதும் பெரிதாகக் கிடைப்பதில்லை பத்து, இருபது, ரூபாய்களைத் தந்தே இப்பிரதேச மக்கள் என்னிடம் மருந்து பெருகின்றனர். சிலரின் வறிய நிலையை கருத்தில் கொண்டு பணம் பெறாமல் கூட நான் மருந்து கொடுக்கின்றேன் எனக் கூறும் 'பரிசாரி முத்தம்மா' இதனை நான் எனது தொழிலாகக் கொள்வதில்லை மக்களுக்கு செய்யும் ஓர் உதவியா கவே கருதுகின்றேன் எனக் கூறுகின்றார்.

முகவரி :- இலைஞர் கழக வீதி
பதிறியா நகர்
மீராவோடை
ஓட்டமாவடி.

நான் இதுவரை குறிப்பிட்டவர்கள் எனது அறிவுக்கிற்பட்ட சில கிராமிய வைத்தியர்கள். நான் மேலே குறிப்பிடாத ராஸிக் பரிகாரி (மீராவோடை) பரீட் பரிகாரி (வாழைச்சேனை) தூங்கல் பரிசாரியின் மனைவி (பிறைந்துழைச்சேனை) அகமட் லெப்பை பரிசாரி( வாழைச்சேனை) முதலானோரும் இப்பிர தேசத்தில் கிராமிய வைத்தியத்துறையில் ஈடுபட்டுள்ளனர். நான் இங்கு குறிப்பிடாத இன்னும் பலரும் இலைமறை காய்களாக இருப்பர். இவாகள் எல்லோரையும் இனங் கண்டு அவர்களை மதிப்பது சமுகத்தின் கடமையாகும். பொதுவாக இந்த வைத்தியர்கள் சிலர் 'இந்த வைத்தியதுறைக்கு மக்கள் அவ்வளவு கண்ணிய மளிப்பதில்லை. இத்துறையைப் படிக்க ஆர்வம் காட்டுவதுமில்லை'. எனக்குறைப்பட்டு கொண்டனர். நான் அவதானித்த வகையில் இத்துறையில் வைத்தியர்கள் பெரும் வருமானத்தைப் பெறுவதாகக் தெரியவில்லை. (சிலர் இதில் விதிவிலக்கு) அவ்வரிருந்தும் முழுநேர அர்ப்பணிப்புடன், தமது சொந்த தேவையைக் கூடத் தியாகம் செய்து அளப் பெரிய சேவையாற்றி வருவதைக் காணமுடிந்தது. நான்கூட தூரஇருந்து நோக்கிய போது இத்துறையை மதிப்புக்குரிய துறையாக எடைபோட வில்லை. வைத்தியர்களைச் சந்தித்து அளவளாவிய போதும், அவாகளது கருத்துக்களைப் பெற்றபோதும். அவர்களிடம் வந்துசென்ற நோயாளர்களைக் கண்டபோதும் இத்துறையில் நாமும் ஈடுபட முடியாதா? என்ற ஆதங்கமும் எனக்குள் பிறந்தது. மற்றொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காட்டுதல் வேண்டும். அதாவது இந்த வைத்தியர்கள் இத்துறையை விருத்தி செய்ய, இப்பணி காலாகாலமாக தொடர தமது சந்ததிகளை, அதில் ஈடுபாடு கொண்டவர்களைப் பயிற்றுவிக்க அதிக அக்கரை காட்டவேண்டும். இன்றைய இளம் தலைமுறையும் இத்துறையை வேண்டி விரும்பித் தெரிவு செய்து சமுகப்பணி செய்ய முன்வரவேண்டும் என்பது தான் எனது அந்த பேரவா! ◆

ஈழத்து இலக்கிய வளாச்சியில் குறிப்பாக கிழக்கிலங்கை இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்த வரையில் தொண்ணுறுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களுளொன்று. பிரதேசமயப்பட்ட ஆய்வுகள் முதன்மை பெற்று விருகின்றமையாகும். இவ்விதத்தில். ஏனைய பிரதேசங்களைவிட மட்டக்க ளப்பு, அம்பாறை மாவட்டங்கள் சார்ந்த பல பிரதேச செயலகங்கள் அவ்வப்பிரதேசம் சார்ந்த விழாக்களை நடத்துவதும் அவ்வேளையில் பிரதேச மலர்கள் வெளியிடுவதும் உண்டு.

மேற்கூறியவாறு பிரதேசமைய ஆய்வுகள் முனைப்புறுவதனால் ஏற்படும் பயன்களுளொன்று. அவ்வப்பிரதேசஞ் சார்ந்த புதிய எழுத்தாளர்கள் இனங் காணப்படுவது மற்றொன்று அவ்வப்பிரதேசஞ் சாந்த பன்முக விடயங்கள் கவனத்திற்குட்படுவதும் அவை ஆழமான அல்லது ஆரம்பகட்ட ஆய்வுக்குட்படுவதும் ஆகும். ஆயினும். இத்தகைய ஆய்வுகளுக்குத் தடை யான, நடைமுறைச் சிக்கலொன்றுள்ளது. அதாவது இத்தகைய ஆய்வுகளுக்குரிய மூல ஆதாரங்கள் அறியப்படாமலோ பட்டியலிடப்படாமலோ காணப்படு கின்ற அவலநிலை நிலவுகின்றது. இதனால். இத் தகைய ஆய்வுகள் சில சந்தர்ப்பங்களிலே முழுமை யற்றுப் போகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது.

மேற்கூறியவாறான ஆரோக்கியமற்ற சூழலின் மத்தியிலேதான் இவ் ஆய்வும் இடம் பெறுகின்றது. ஓட்டமாவடி. வாழைச்சேனைப் பிரதேச முஸ்லிம் கவிஞர்கள் பற்றி முழுமையான தகவல்கள் அறியப் படாத நிலையில் இதுவரை வெளிவந்து இவ் ஆய் வாளருக் குக்கிடைத்துள்ள பின்வரும் தொகுப்புகளே இங்கு ஆய்விற்குதவுகின்றன.

i) விடுதலையின் நிகழ்வுகள் - வாழைச்சேனை அமர் *(1985 -?)*

ii) இமைக்குள் ஓர் இதயம் ஏ. ஜீ. எம் ஸதக்கா *(1987)*

iii) எரி நெருப்பிலிருந்து - ஓட்டமாவடி அறபாத் *(1996)*

iv) போர்க்காலப் பாடல்கள் - ஏ. ஜீ எம் ஸதக்கா *(1998)*

v) காணாமல் போனவர்கள் அ்ரப் சிஹாப்தீன் *(1999)*

vi) கடைசிச் சொட்டு உசிரில் எஸ். நளீம் *(2000)*

மேற்கூறிய கவிஞர்களுள் காலத்தினால் முற்பட்டவராக அஷ்ரப் சிஹாப்தீன் அறியப்படுகின்றார். வடிவரீதியில் இக்கால கட்டத்திலே ஈழத்திலே புதுக் கவிதை பரவத்தொடங்கிவிட்டதாயினும் மரபுக் கவிதை செல்வாக் கிழக்கவில்லை. இத்தகைய மரபுக்க விதை களிலே இருவித போக்குகள் காணப்பட்டன.

i) ஏலவே இருந்து வந்த யாப்போசைக்கு முதன்மை கொடுத்தல்.

ii) பதிலாக, பேச்சோசைக்கும் சொற்தேர்வுக்கும் முதன்மை கொடுத்தல்.

# ஓட்டமாவடி வாழைச்சேனை பிரதேச கவிதை வளர்ச்சி

கலாநிதி. செ யோகராசா

அஷ்ரப் சிஹாப்தீனைப் பொறுத்த வரை யிலே அவரின் கவிதைப்பிரவேச ஆரம்பநிலையில் முதற்போக்குக் காணப்பட்டுள்ளது.

__எடுத்துக்காட்டு__

“பெண்ணழகை உடைகுறைத்துக் கோலம் தீட்டிப்
பேரெழிலாய் வீதிகளில் நிறுத்தி வைத்துக்
கண்களுக்குக் குளிர்ச்சியினை வழங்குகின்ற
காட்சி இனிமேலும் இந்த நாட்டில் வேண்டாம்”

எனினும் கால அடைவில் இரண்டாவது போக்கிற்கேற்ப எழுதும் கவிதா ஆற்றல் அவருக்கு ஏற்பட்டு விடு கின்றது.

__எடுத்துக்காட்டு__

“உன்னை அழைத்து உன்
உச்சியிலோர் குட்டு வைத்து
எண்ணெய் உனக்கில்லையோ
ஏன் தலையை வாரவில்லை
என்னடி இப் பெரியநகம்
ஏன் வெட்டவில்லை என
உன்னை உறுக்குகையில்
உறக்கச் சிரிப்புதிர்ப்பாய்”

மேற்கூறிய விடயத்தை இங்கு வற்புறுத்த வேண்டியுள்ளது. காரணம் பின் வந்த இப்பிரதேசக் கவிஞர்களிடம் மரபுக்கவிதை எழுதுமாற்றல் அருகியுள்ளது. பின் வந்தோருள் ஸதக்காவின் சில கவிதைகள் அவ்வாறிருப் பினும் அவை மேற்கூறிய முதற் போக்கினைப் பிரதிபலிப்பனவே. ஆக. இவ்வடிப்படையில் இப்பிரதேசக் கவிஞர்களுள் அஷ்ரப் சிஹாப்தீன் கவனத்திற்குரிய வராகின்றார்.

இனி. உள்ளடக்கம் பற்றி அவதானிக்கின்ற போது குறிப்பாக ஈழத்து முஸ்லிம் கவிஞர்களின் கவிதைகளில் சில தனித்துவமான பண்புகள் இடம் பெறுவதை இலக்கிய ஆர்வலர்கள் அறிந்திருப்பர். அவையாவன:

i) முஸ்லிம் மக்களது வாழ்க்கை நிலைமை (எ-டு: வறுமை, சீதனப்பிரச்சினை)

ii) இஸ்லாம் நோக்கிலே முஸ்லீம் மக்களது பண் பாட்டு நிலை.

iii) இஸ்லாம் மார்க்கப் போதனைகள்

மேற்கூறிய பண்புகளும் அஸ்ரபின் கவிதைகளில் முதன்மை பெற்றிருக்க. பின்வந்த கவிஞர்களிடம் அருகிப்போவதை (தொகுப் புகளூடாக) அறிய முடிகின்றது. (இத்தகைய போக்கின் முன்னோடிக் கவிஞர் புரட்சிக் கமால் என்பது குறிப்பிடத்தக்கது)

இனி எண்பதுகளுக்கு வருகின்றபோது வடிவாீதியில் ஈழத்திலே பரந்த செல்வாக்குப் பெற்றுவிட்ட புதுக்கவிதைப்போக்கிற்கு ஆட்பட்டவர்களாகவே இப் பிரதேசக் கவிஞர்களும் காணப்படுகின்றனர்.

உள்ளடக்க அடிப்படையில் எண்பதுகளில் ஈழத்துக் கவிதைப் போக்கிலே நான்கு போக்குகள் உரு வாகியிருந்தன.

i) பேரினவாத ஒடுக்கு முறைக்கான எதிர்ப்புக்குரல்
ii) பெண்நிலைவாதம்
iii) புகலிட அனுபவம்
iv) தமிழ்த் தேசியவாதம்

இவற்றுள் முதற்போக்கு இப்பிரதேசக் கவிஞர்களிடம் முனைப்புற்றிருப்பது வெளிப்படையே எழுத்தாளத்தக்கது. அது பின்வருமாறு.

'மனித உணர்வுகள் அடக்கப்பட்டு ஒடுக்கப் பட்டு
விட்டது
'அவசரகாலம்' என்று நடக்கும் கொடுமை! தனி
மனிதனின்
சுதந்திரப் பாதிப்பு சொல்லப் போனால். இது
அணு குண்டின்
ஆட்சி இனமாரி காலம் வந்து இரத்த வெள்ளம்
ஓடுகிறது
நீதியும் நியாயமும் நாடு கடத்தப்பட்டு,
கொடுமையே
குடியேறியிருக்கிறது ....................'

இதற்கும்பால் இப்போக்கினை வெளிப்படுத்துவதற்கு இக்காலத் தொகுப்புகளின் தலைப்பு சிறந்த எளிதான - சான்றுகளாகிவிடுகின்றன. 'விடுதலையின் நிகழ்வுகள்' 'எரிநெருப்பிலிருந்து' 'போர் காலப் பாடல்' 'காணாமற் போனவாகள்' 'கடைச்சிக் சொட்டு உசிரில்'

எனினும், இத்தகைய போக்கினை முழுமையாகவும், பன்முகப் பரிமாணங்களுடன் பதிவுசெய்வதாக, ஓட்டமாவடி அரபாத்தின் 'எரி நெருப்பிலிருந்து' என்ற தொகுப்பு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளின் முனைப்பான போக்கான தமிழ்த் தேசியவாதம்' விடுதலைப் போராட்டம் என்பன தொடர்பாக எண்பதுகளில் தமது மாற்றுக்கருத்துக்களை முன்வைக்காத இப்பிர தேசக்கவிஞர்கள், அண்மைக் காலந்தொடக்கம் முஸ்லீம் தேசிய உணர்வினை வெளிப் படுத்து வதனையும், அவ்வடிப்படையில் 'தமிழ்த் தேசிய வாதம், விடுதலைப் போராட்டம் தொடர்பான மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

எண்பதுகளின் முனைப்பான போக்கான பெண்நிலைவாத நோக்கினை அவதானிக்கின்ற போது மட்டக்களப்பு, அம்பாறை பிரதேச முஸ்லீம் பெண் கவிஞர்ள் சிவர் கவனத்திற்குரியவர்களாவுள்ளனர். இவ்விதத்தில் மூத்த தலைமுறையினரில் சுல்பிகா மன்சூர் ஏ. மசூறா, முதலானோரும் இளைய தலை

முறையினரில் மருதமுனை அனார், 'பெண்ணியா' முதலானோரும் குறிப் பிடத்தக்கவர்கள். இங்கு கேள்வி யாதெனில், ஓட்டமாவடி, வாழைச்சேனை, பிரதேசத்தி லிருந்து ஏன் இத்தகைய பெண் கவிஞர்களை இனங் காண முடியாதுள்ளது என்பதே.

இறுதியாக, இப்பிரதேச நவீன கவிதை வளர்ச்சிபற்றி சுருக்கமாக பின்வரும் விடயங்களை எடுத்துரைக்க விழைகின்றேன்.

i. இபிரதேசக் கவிஞர்கள் (ஓரளவு அஷ்ரப் சிஹாப்தீன் தவிர) தமிழக வானம் பாடிக் கவிஞர்களின் தாக்கம் ஈழத்து சோலைக்கிளியின் தாக்கம் என்ப வற்றிலிருந்து இன்னமும் விடுபடவில்லை.

ii. கவிதையின் உயிர், சொல், இவ்விதத்தில் தேர்ந்த சொல்லாட்சி, நளினமான சொல்லாட்சி, மௌனம் கொண்ட சொல்லாட்சி, இறுக்கமான சொல்லாட்சி, என்பன அவசியமா னவையாகின்றன. இத்தகைய சொல் ஆளுமை இப்பிரதேசக் கவிஞர்களிடம் அரிதாகவே காணப்படுகின்றது.

iii. பிரச்சாரம், கோஷம் வித்துவம் என்பன வற்றிலிருந்து இன்னமும் விடுபடாநிலை காணப்படுகின்றது. (எ-டு கடைசிச் சொட்டு உசிரிலுள்ள பல படைப்புகள்.)

iv. உலகளாவிய பார்வை உருவாகாத நிலைமை காணப்படுகின்றது.

v. தெளிவான சமூக, அரசியல் பார்வை குன்றியுள்ளது. 'தெளிவில்லாத' சமூகப் பார்வைக்கு ஒரு எ-டு


'சூடும்நாள்வரும் – ஸதக்கா
''ஏழ்மை ராஜ்யத்தின் இராஜகுமாரியே'
'நிலத்தைக் கீறிக் தலை
நீராட்டுகின்ற பயிர் போல
உன்
ஏழ்மையை இதயந்தாங்க
இராஜகுமாரன் வருவான்
தென்றலாய் உனையே
தோளில் சுமப்பான்:

iv. இவ்வாறு நோக்கும்போது ஈழத்தின் குறிப்பிடடத்தக்க கவிஞர்கள் ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்ற தனித்துவப் பண்புகள் இக்கவி ஞர்களிடம் (ஓரளவு அஷ்ரப் சிஹாப்தீன் ஓட்டமா வடி அரபாத் தவிர) இன்னமும் உருவாகாமை புலப்படுகின்றது.

எனினும் ஆரோக்கிமான கவிதைப் போக்கு உருவாகும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்பதனை இக்கவிஞர்களின் மிக அண்மைக்கால முயற்சிகள் சில உணர்த்தி நிற்கன்றன • எ-டு 'அரசி' வாழைச்சேனை அமர்) என்பதனையும் இறுதியில் குறிப்பிட்டே ஆகவேண்டும். ◆

## பிரதேச நூல்கள்

| | | |
|---|---|---|
| இஸ்லாமும் சர்வமத கோட்பாடும் | - ஆய்வு | ~ ஓட்டமாவடி அறபாத் |
| தப்லீக் அன்றும் இன்றும் | - விமர்சனம் | ~ ஓட்டமாவடி அறபாத் |
| த.்.லீம் தொகுப்பு குர்ஆனுக்கு எதிரானதா? | - விமர்சனம் | ~ ஓட்டமாவடி அறபாத் |
| ஆண்மரம் | - சிறுகதைத்தொகுதி | ~ ஓட்டமாவடி அறபாத் |
| இமைக்குள் ஓர் இதயம் | - கவிதைத்தொகுதி | ~ ஏ.ஜி.எம்.சதகா |
| போர்க்காலப் பாடல் | - கவிதைத்தொகுதி | ~ ஏ.ஜி.எம்.சதகா |
| கருத்துச் சுதந்திரம் | - ஆய்வு | ~ ஏ.பீ.எம்.இத்ரீஸ் |
| இஸ்லாத்தின் சிறுவர் உளவியல் | - ஆய்வு | ~ ஏ.பீ.எம்.இத்ரீஸ். |
| அல்குர்ஆன் ஓர் அறிமுகம் | - ஆய்வு | ~ ஏ.எல்.பீர்முகமட் |



# நானும் என் கவிஞனும்

வானத்து நிலவு கடல் மீது பவனி வர
ஏகாந்த கிறக்கத்தில் அலைகள்
உயிர்ப்பின்றி உறங்கின

இயற்கை இருக்கை தர
கடலை வெறித்து நாமிருந்தோம்
"காலக் கருப்பைக்குள்
கனவுகள் வித்தோடி
வாழப் பிறந்த
வளர்பிறையே, எழுக."

கவிஞன் நீ
மனிதத்தைப் பாடுகிறாய்
உன் உணர்வுகளுக்கும் உருத் தெரியவில்லை
இருட்டு -

சத்தியத்தின் ஈரம் உலராதந்த நாட்களில்
உனக்கென்ன நேர்ந்தது?

நிராயுதத்தின் முன்னாலன்று
ஆயுதங்களேன் தோற்றுப் போயின?

கடலில் ஊரும் நிலவை வெறித்து
என் வீட்டுக் கதவும்
தட்டப்படுவதற்காய் காத்திருந்து ...

காற்றாலும் நிரப்ப முடியாவுன் வெற்றிடம்
தினமும் என்னை வதைக்கிறது
தனிமைக்குள்ளே விதைக்கிறது

கடுகி விரைகின்ற கடலலைகளின் மீது நின்று
என்னை அழைப்பது நீயா?

சாவிலும் நீ வாழ
நான் எழுந்தேன்

காற்று எனக்கு வாழ்த்துச் சொன்னது -

ஏ. ஜீ. எம். ஸதக்கா
220600



# சிறுகதை

# சீதனம்

தேவிக்கு தூக்கம் பிடிக்கவில்லை பாயில் புரண்டு புரண்டு படுத்தாள் ம்ஹும் அது வருவதாக இல்லை. இவ்வேளையிலேயே இரவில் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு எங்கோ இருந்து நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. பாயில் படுத்துக் கிடந்தவள் எழுந்து சென்று யன்னலைத் திறந்து பார்த்தாள் தெளிவான வான் பரப்பின் இடையே அழகிய நிலா யன்னல் கம்பி களினூடாக அவளை எட்டிப் பார்த்தது அவ் அழகிய நிலாவை சுற்றிலும் நட்சத்திரங்கள் தங்கத் தூள்களை தூவி விட்டது போல் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. பார்ப்பவரை எல்லாம் சந்தோஷப் படுத்தி கவிதை எழுதத் தூண்டும் இவ் இயற்கைக் கோலத்தை பார்த்தவுடன் தேவியின் மனதில் மாற்றமாக இந்த நட்சத்திரங்கள் எல்லாம் பூமிக்கு வந்து ஏழைகளின் வீடுகளில் தங்கமாக விளையக் கூடாதா? கடவுள் என்னை நட்சத்திரங்களில் ஒன்றாகப் படைத்திருக்கக் கூடாதா? அவ்வாறு இருந்தால் என்னால் இவ் உலகிற்கு சிறிய வெளிச்சமாவது கிடைத்திருக்குமே? இவ் உலகில் ஏன் என்னை கடவுள் படைத்தான்? என்னால் ஏதும் பயன் உண்டா? போன்ற கேள்விகள் எழுந்தன. எழுந்த கேள்விகளுக்கு விடை ஏதும் இருப்பதாகவும் அவளுக்குத் தெரியவில்லை. அவளுக்குத் தெரிந்த கண்ணீர் பாத்திரம் அவள் கண்ணிலிருந்து எட்டிப் பார்த்தது. இனி மேலும் அவ் இடத்தில் நிற்க அவளுக்குப் பிடிக்க வில்லை. யன்னலை இழுத்து மூடி விட்டு தலையணையில் தலையை வைத்தாள் தலையணை நனைந்து கண்ணும் சோர்வடைய உறங்கிப் போனாள்.

தேவியோ சிறு வயதிலேயே தந்தையை இழந்தவள் அன்றிருந்து தாய் செல்லம்மா தான் தேவிக்கு எல்லாமே தேவிக்கு ஒரு தங்கையும் உண்டு. செல்லம்மா தன் இரு பிள்ளைகயையும் கைத்தொழில்கள் செய்து அதில் வரும் வருமானத்திலேயே தன் குடும்ப வண்டியை ஓட்டிக் சென்றாள். தேவிக்கு பொருளாதார நிலை இடங் கொடுக்காததால் கல்வியை இடையில் நிறுத்தி விட்டு தாய்க்கு உதவியாக வீட்டில் இருந்து கொண்டாள். தேவியிடம் 'ஏழை' என்ற ஒரு குறையைத் தவிர அவளிடம் எவ்வித குறைபாடுகளும் இல்லை.

தேவி திருமண வயதை எட்டிப் பிடித்ததும் மாப்பிள்ளை பார்க்கும் படலம் ஆரம்பமானது. தரகர்களிடம் தேவியின் புகைப்படம் கொடுக்கப்பட்டது. அதற்கேற்ப மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு பெண் பார்ப்பதற்காக வருவார்கள். அவர்களின் செயற்பாடுகளா பெண்பார்க்க வந்ததைப் போல் இராது மெழுகு பொம்மை போல் இருக்கும் அழகிய பெண்ணைத் தான் பார்க்க வந்தோம். ஏதோ காட்சிக்கு வைத்த பொம்மையைப் பார்ப்பது போல் தேவியைப் பார்த்து விட்டு சென்று விடுவார்கள். மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பத்தில் இருந்து யார் யாரோ வந்தார்கள். தேவியைப் பார்த்ததுடன் சென்று விடுவார்கள் கலியாணப் பேச்சையே ஒருவரும் தொடங்குவது இல்லை.

தினமும் தேவியின் தாய் தேவிக்கு தெரியாமல் தேவியின் எதிர் காலத்தைப் பற்றி கண்ணீர் விட்டு அழுது கொண்டே இருப்பாள். பாவம் அந்த ஏழைத் தாய்க்கு கண்ணீர் விட்டு அழுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. வரன் கேட்டு பல இடங்களுக்கு சென்றாலும் செல்லும் இடங்களிலெல்லாம் 5 இலட்சத்திற்கு குறையாத பணமும், ஆடம்பர பொருட்கள் அனைத்தும் அடங்கிய பெரிய வீடு நகைகள் என்பன கேட்கப்படும். மாப்பிள்ளைமார் வெவ்வேறு பட்டவர்களாக இருந்தாலும் சீதனம் கேட்பதில் ஒன்றுபட்டவர்களாவே இருந்தனர். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் சீதனம்

கேட்கும் தொகையைக் கேட்டு செல் லம்மா மௌனித்துப் போவாள். 3 நேர சாப்பாட்டுக்கே வழியன்றித் தவிக்கும் இவ் ஏழைக் குடும்பம் சீதனத்திற்கு எங்கே செல்லும் தன் மகளிடம் விலை மதிக்க முடியாத நற்பண்பு, அடக் கம், ஒழுக்கம், அழகு ஆகியவை இருந்தும் பணத்தையே பெரிதாக மதிக்கும் இச் சமுதாயத்திற்கு முன் னால் அவரால் போராட முடிய வில்லை.

தன் வீட்டு முற்றத்தில் சேவல் கூவும் சத்தம் கேட்டு விழித் துக் கொண்ட தேவி எழுந்து தன் தாய் அப்பம் சுடுவதற்கான அனை த்து முன் ஆயத்தங்களையும் செய்து முடித்து விட்டு தன் தாயை எழுப்பி விட்டு தன் அறையில் துங்கிக் கொண்டிருந்த தங்கை மல்லிகா வை மல்லிகா.. மல்லிகா.. எழும்பு எழும்பு கிணற்றடிக்குப் போய் முகத்தைக் கழுவி விட்டு வந்து புத்தகத்தை எடுத்து வைத்துப்படி என்று கண்டிப்புடன் கூடிய தொனி யில் கூறி விட்டு தன் வீட்டு முற்ற த்தை துப்பரவு செய்யத் தொடங் கினாள். காலையில் இருந்து வீட்டு வேலைகளை பம்பரமாகச் சுழன்று செய்து முடித்த தேவி குளிப்பதற் காக தனது உடைகளை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். அவ்வேளையில் 'தேவி' என்ற தாயின் குரல் தேவியை இடைமறித்தது. 'என்னம்மா' என்று அமைதியான குரலில் கேட்ட தேவியிடம் ஒன்னு மில்லை இண்டைக்கு ஒன்ன பெண் பார்க்க யாரோ வர்றாங் களாம்மா...... என்று கூறிய தாயை ஏறிட்டுப் பார்த்த தேவி பெண் பார்க்க வர்றாங்க பெண் பாக்க வர்றாங்க என்று எத்தனை தடவ அம்மா நானும் அவங்களுக்கு முன் னால புடவையை கட்டிட்டு நின்றி ருக்கிறன். அவங்க எல்லோரும் என்ன பெண் பார்க்க வரல்ல என் அழகை ரசிக்கிறத்துக்காக வருறாங்கம்மா ஏழை வீட்ல பொறந்தா பொம்புளங்க எல்லாம் உண்மையில பொம்மைகள் தான் பெண்களெல்லாம் மனிசப் பிறப்பா வாழ்றன்னா பணக்கார வீட்ல பொறக்கனும். ஏன்னா சமுதாயத்தில பணம் தான் வாழ்க்கையை தீர்மா னிக்கிறதம்மா பணத்துக்குத் தான் மதிப்பு முதலிடம் ஏழை வீட்ல பெண் பிறந்தா அவளுக்கு வெகு மானமாகக் கிடைக்கிறது கண்ணீர் மாத்திரம் தான் ஏழைப் பெண்க ளெல்லாம் பட்ட மரம் அவங்களால எந்தப் பயனும் இல்ல சீதனம் என்ற அரக்கன் இந்தக் சமுதாயத்தில இருக்கும் வரைக் கும் என்னைப் போல ஏழைப் பெண்களெல்லாம் பொம்மைகளம்மா....... என தன் மனதில் அடக்கி வைத்திருந்த உள்ளக் குமுறல்கள் யாவற்றையும் கண்ணீர் விட்டு அழுது தன் தாயிடம் கொட்டித் தீர்த்தாள். தன் மகளுடன் சேர்ந்து செல்லம்மாவும் அழுதாள். இரு வரது கண்ணீரும் தரையில் சங்கமிக்க தரை நனைய ஆரம்பித்தது. இவர்களின் கண் ணீர் என்றாவது ஓயுமா? ஏழை களுக்கு இது தான் விதியா?

எம். எம். எவ். முஜிதா

பிரதேச சாகித்திய விலாவவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.



மருதோன்றி

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சாகித்திய விழா

**சிறப்பு மலர் - 2001**

மலர் தொடர்பான கருத்துக்களையும், விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் தத்தமெக்கென தனியான கலைப்பாரம் பரியங்களை கொண்டிருக்கின்றனர். இப்பாரம் பரியங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன, பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடுகின்றன, சமயத்திற்குச் சமயம் வேறுபடுகின்றன. இலங்கை வாழ்மக்களிடமும் இக்கலைப்பாரம் பரிய ங்கள் நிறைந்துள்ளன. அவையும் பல்வேறு தரப்பட் டனவாக அமைந்துகிடக்கின்றன.

# கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் அருகிவரும் கலைப் பாரம்பரியங்கள்

இலங்கையில் சிங்களவர், தமிழர், இஸ்லா மியர், பறங்கியர் எனப் பல இனத்தவர் வாழ்கின்றனர். இவர்களுள் இஸ்லாமியர் கலைப்பாரம் பரியங்களைப் பேணுவதில் நிற்கின்றமை அண்மைகால ஆய்வுகளில் தெரியவருகின்றது. இதற்குக் காரணம்: அறிவியல் வளர்ச்சியும், பெருகிவரும் உலகியல் தேவையும் என்றால் மிகையில்லை. அத்தோடு மார்க்கத்தை முதன் மைப்படுத்துவதோடு, இஸ்லாமியர் தம்மாக்கத்துக்கு இக்கலைப் பாரம்பரியங்கள் முரணாக இருக்குமோ என ஐயுற்றும் பேணாமல் விடுகின்றனர். ஆனால், இதற்குமாறாக ஏனைய இனத்தவர்கள் தங்கள் கலைப் பாரம்பரியங்களை பாதுகாப்பதுடன் பழமையான அதன் வரலாற்றைக் கூறி, அப்பாரம்பரியங்களுக்குரிய பிர தேசம் தம்மினத்துக்குரியதென்று வாதிட்டும் வரு கின்றனர்.

இலங்கையில் கிழக்கு மாகாணம் முஸ்லிம்கள் அதிகமாய் வாழும் பகுதியாகும். நீண்ட வரலாற்றைக் கொண்ட இம்மக்களிடம் தனித்துவமான பல கலைப் பாரம்பரியங்கள் இருந்து வந்தன. இருபதாம் நூற் றாண்டின் கடைக்கூற்றில் ஏற்பட்ட மார்க்க அறிவியல் வளர்ச்சியும், இனக்கலவரங்களும், அகதி வாழ்க்கையும், வெளிநாட்டுப் பயணங்களும் இக்கலைப் பாரம்பரி யங்களை ஓரங்கட்டி விட்டன.

கலைப்பாரம்பரியப் பொருட்களுடன், சடங்கு களும் இன்று கிழக்கிலங்கை முஸ்லிம்களால் மறக்கப் பட்டு வருகின்றன. பரிசச் சிமிழ், மாப்பிள்ளைப்பாய், மாப்பிள்ளைத்தட்டு, மக்கத்துச் சால்வை, வட்டுவம், முதலானவற்றின் பெயர்களை கேட்டால் பலர் இது வெல்லாம் என்ன? என்று அதிசயமாய்க் கேட்கும் நிலை இன்று காணப்படுகின்றது.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பாரம்பரி சடங்குமுறையான சில வைபவங்களும் இன்று மறக் கப்பட்டுவிட்டன. பல்லுக்கலியாணம், காதுகுத்தல் வைபவம், பிள்ளைக் கலியாணம், திருமண ஊர் வலம், மருதோன்றி மாற்றல், திருமண வாழ்த்து என்பன அவற்றுள் முக்கியமானவை. இன்றைய தலைமுறை யினர் இப்பெயர்களை கேட்டாலே அதிசயமாகப் பாரக் கின்றனர். என்ன ஏதென்றே புரியாமல் விழிக்கின்றனர்!

செல்வி.எம்.பி.ஹசீனாபானு
உயர்தர கலைப்பிரிவு
அந்நூர் தேசிய கல்லூரி,
வாழைச்சேனை.

பல்லுக் கலியாணம் மட்டக்களப்பு முஸ்லிம் மக்களிடமிருந்து, சென்ற நூற்றாண்டின் எழுபதுகளி லேயே விடைபெற்றது. குழந்தை பிறந்து சிலமாதங் களின் பின் பல்முளைத்தவுடன் பெற்றோரும், உறவி னர்களும் பல்லுக்கலியாணம் என்ற பெயரில் கூடி விருந்துண்டு மகிழ்கின்ற வைபவம் தற்போது எங்குமே நிகழ்வதாய்க் காணவில்லை,

பிள்ளைக் கலியாணம் என்பது வீட்டு வளவில் நடப்பட்டுள்ள ஒரு தென்னை மரம் முதன்முதலாகப் பாளையை வெளிப்படுத்தியவுடன் மேற்கொள்ளப்படும் ஒரு நிகழ்வாகும். இக்கலியாணத்திற்கு இல்லத்தலை வியின் தோழியினரே அழைக்கப்படுவது சிறப்பாகும். பெண்கள் திருமணத்திற்குப் பின்னும் தோழிகளு டனான நட்பைப் பேணுவதற்கு இம்முறை உதவியது. இன்று இதுவும் மறைந்துவிட்டது. தோழிகள் கூடி தென்னைக்கு நீருற்றி, பாளைக்கு ஒரு மாலையைச் சூட்டி விடுவது என்பது இன்றைய நாகரிகத்தில் ஜீரணிக்க முடியாத தொன்றாகிவிட்டது போலும்.

பெண் குழந்தை பிறந்ததும் அதற்கு காதில் மின்னி அணிவிக்கின்ற நிகழ்ச்சியே காதுகுத்தல் வைபவம் என வழங்கப்படுகிறது. இதன்போது உறவினர்கள் ஒன்று கூடி, சுகதுக்கம் விசாரிப்பது வழக்கம். இந்நிகழ்வு கிழக்கிலகையில் அதிகமான பிரதே சங்களை விட்டு மறைந்தாலும், ஒரு சில கிராமங் களில் இன்றும் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் திரு மண ஊர்வலம் என்பது கிழக்கிழங்கை முஸ்லிம் மக் களிடம் பாரிய நிகழ்வாக இருந்தது. இந்த நிகழ்வின் போது ஆடப்படும் ஆட்டங்களும் கூத்துக்களும் சாகசம் நிறைந்தவை. சீனடி, சிலம்படி, கோலாட்டம், பந்தம் வீசல், சலாம் வரிசை என பலதரப்பட்ட வீரவிளையாட் டுக்கள் அவற்றில் அடங்கும். அவற்றோடு, பக்கீர் வைத்து, குலவை விடுதல் என்பனவும் இணைந் திருக்கும்.

திருமண ஊர்வலம் இரண்டு வகையாக நடை பெற்றது. சிறிய ஆண்பிள்ளைகளுக்கு மேற்கொள்ளப் படும் கத்னா எனும் மார்க்க அனுட்டானத்தின் போது நடைபெறும் ஊர்வலம் ஒருவகை அலங்கரிக்கப்பட்ட மோட்டார்காரிலோ, அல்லது டிரக்கர் வண்டியிலோ அழகாக உடையுடுத்தி கத்னா செய்யவிருக்கும் சிறு வனை வீதிகள் தோறும் அழைத்துச் செல்லவதுண்டு. அப்போது உறவுப்பெண்கள் குலவை இட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்வார்கள். பாவாமார் ரபான் அடித்து பைத்துப் பாடிச் செல்வர். இவ்வூர்வலத்தைப் பார்ப்பதற்கு தெருவோர வேலிகள் எங்கும் பெண்கள் மறைந்து நிற்பர்: ஆண்கள் வீதியோரத்தில் கூடி நிற்பர். இன்று கத்னா என்ற விடயம் ஆடம்பரமானதல்ல, ரகசியமான தொன்று என்பதை உணர்ந்த இம்மக்கள் இவ்வூர் வலங்களையெல்லாம் நடாத்துவதில்லை.

ஏனைய இன மக்களோடு ஒத்துப்போகின்ற திருமண ஊர்வலமாக மணமகனை மணமகள் வீட் டுக்கு அழைத்துச் செல்லும் ஊர்வலம் அமைந்திருந்தது. அலங்கார உடை உடுத்து, மச்சினன்மார் குடைபிடித்து, இரவு நேரங்களில் மணமகனை பெண்வீட்டுக்கு அழைத்துச் செல்லும் இவ்வூர்வலத்தில் அதிகமானோர் கலந்து கொள்வார்கள். மௌலவிமார் முன்னால் 'பைத்' ஓதிச் செல்வார்கள். இதன் போது பட்டாசு கொழுத்தியும், வான வேடிக்கை செய்தும், பெண்கள் குலவையிட்டும் சிறப்பித்தனர். இனக்கலவரங்கள் தலையெடுத்தபின் கிழக் கிலங்கையில் இரவுநேர திருமணங்கள் நடைபெறு வதில்லை. அத்தோடு இத்திருமண ஊர்வலமும் நின்று விட்டது.

மின்சாரம் இப்பிரதேசங்களில் இல்லாத காலங் களில் பிறை 9.11.13.14.15.17. ஆகிய தினங்களில் திரு மணங்கள் நடைபெறும். இரவில் நிலவின் ஒளி திருமண நிகழ்ச்சிக்கு உதவுவதாக அமையும். தற்போது பகல் நேரத்திருமணங்களே நடைபெறுவதால் இப்பிறைக் கணக்கெல்லாம் பார்த்துக் காத்திருப்பதில்லை. அமா வாசையிலும் திருமணங்கள் நடைபெறுகின்றன.

முஸ்லிம் மக்களின் திருமண ஊர்வலங் களில் ஆண்களே பங்கெடுப்பதால், பெண்கள் மாத் திரம் கல்ந்து கொள்ளும் ஓர் ஊர்வலமாக மருதொன்றி மாற்றல் இடம் பெற்றது. திருமணத்திற்கு முதல் நாள் மணமகனுக்கு மச்சி முறையான பெண்கள் மருதோன்றி கொண்டு வருவர். மணமகனுக்கு கைவிரல்களில் இட் டபின் மணமகள் வீட்டுக்கு கொண்டுசென்று, மண மகனின் சகோதரிகள், மணமக்களின் கைகளில் மரு தோன்றி இடுவர். மருதோன்றி தட்டை பெறுவதற்காக வருபவர்களும், அதை கொண்டு செல்லும் குழுவினரும் தம்மை நோக்கி மற்றக்குழுவினர் வரவேண்டும் என் பதிலேயே குறியாயிருப்பர். 500 மீற்றர் தூரத்தை இக்குழுவினர் கடந்து செல்ல மணித்தியாலக் கணக் கில் நேரம் எடுக்கும். இது சுவாரசியமான நிகழ்ச்சியாக அமையும். தற்போது இந்நிகழ்வும் ஒரு சில இடங்களில் மாத்திரமே இடம் பெறுகின்றது.

முன்பு, கவிபாடல் என்ற கலைப் பாரம்பரியம் கிழக்கிலங்கை எங்கும் பரவியிருந்தது. ஈழத்து நாட்டார் பாடல்களை வளர்த்தெடுத்த பெருமையும் இக்கவி பாடலுக்கு உண்டு. திருமணவைபவங்களில் பெரியோர் கள் எழுத்து திருமண வாழ்த்துக்கவி பாடுவதும், அதை எல்லோரும் இரசித்து நிற்பதும் வழக்கம். மற்றைய நேரங்களில் ஒருவர் ஒருசில வரிகளைப்பாட, மற்றொ ருவர் அதனுடன் கூடி இரசிக்கும் நிலையும் இருந்தது. இன்று அம்பாரை மாவட்ட முஸ்லிம்களிடம் மட்டும் ஓரளவு இக்கவிபாடல் நிகழ்வு காணப்படுகின்றது.

கிழக்கிலங்கையில் "பக்கீர்" பரம்பரையினர் வாழ்ந்து வருவதால் அவர்களின் "பைத்"தும் முக்கிய கலை நிகழ்வாக இடம் பெற்று வந்தது. விசேட வைபவங்களில் இது இடம் பெறுவதுண்டு. தற்போது இது மறைந்தாலும் நோன்பு மாதத்தில் "சஹர்" நேரம் மக்களை தூக்கத்திலிருந்து விழிக்கவைப்பதற்கு இன்றும் பாடப்படுகின்றது.

முஸ்லிம்களின் பெருநாள் காலங்களில் சில கலை நிகழ்ச்சிகளில் இடம் பெற்றும் வந்தது. கோடுகச்சேரி, நொண்டி நாடகம் என்பவை அவற்றுள் முக்கியமானவை. ஆண்கள் மாத்திரமே வேசங்கள் தரியாது இவற்றில் பங்கெடுத்தாலும் பார்வையாளர்களை மையமாகக் கொண்டு எழுந்த சர்ச்சைகளில் இந் நிகழ்ச்சிகள் மறைந்து விட்டன. வாழைச்சேனை ஹுஸைன் வைத்தியர் எழுதித் தயாரித்து நடித்து வந்த குளத்துப் போடியார் என்றகோடு கச்சேரி இன்றும் முதியோர்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது.

தாலாட்டு குழந்தை பிறந்த வீடுகளில் அரபு மொழிச் சொற்கள் கலந்து தமிழில் ஒலித்தது. இன்று, இத்தாலாட்டுக்களும் மறைந்து விட்டன. ஓப்பாரிப் பாடல்களும் மறைந்து விட்டன. மருத்துவிச்சிப் பாடல்களும் வைத்திய சாலைகளின் வளர்ச்சி கண்டு ஒதுங்கிவிட்டன. இவைகளெல்லாம் நாட்டார் பாடலுக்குள் வரு மாயினும் இஸ்லாமிய கருத்துக்கு முரண்படாத வகையில் அன்று அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

சீனடி, சிலம்படி, கோலாட்டம், சலாம் வரிசை, பந்தம் வீசுதல் ஆகிய சாகச விளையாட்டுக்கள் விளையாடிய இஸ்லாமியப் பெரியார்கள் இன்று பலர் மறைந்து விட்டனர். இன்று ஆயுதங்கள் செல்வாக்குச் செலுத்துவதாலோ என்னவோ, இளைஞர்களை இவ் விளையாட்டுக்கள் கவரவில்லை போலும்.


இந்நிலை இப்படியே தொடர்ந்தால் கிழக்கு முஸ்லிம்களின் கலைப்பாரம்பரியங்கள் என்று சொல்ல எதுவும் எஞ்சியிருக்காது. இன்றைய தாத்தாக்களும், பாட்டி மாரும் மறைந்த பின் இவைபற்றி அறிய எதிர்காலச் சந்ததிக்கு எந்தச்சுவடும் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலையே இன்று நிலவுகிறது. இதனை மாற்றும் முயற்சியை இஸ்லாமிய அறிஞர்களும், கலைகலாசார சமூகசேவை நிறுவனங்களும் மேற்கொள்வது கடனாகும். இல்லையேல் கிழக்கில் முஸ்லிம்களுக்கு வரலாறு ஒன்று மறைக்கப்பட்டு விடலாம் என்பதில் சந்தேகமில்லை! ◆

## பிரதேச நூல்கள்

| | | |
|---|---|---|
| அலி(ரழி) அவர்களின் வரலாற்று முக்கியத்துவ மடல் | - கடித இலக்கியம் | ~ எல்.ரீ.எம்.ஹலீம் |
| 'இக்ரஹ்' | - ஆய்வு | ~ எல்.ரீ.எம்.ஹலீம் |
| உஞ்சல்பாட்டு | - சிறுகாவியம் | ~ எம்.எல்.லெவ்வைத்தம்பி ஆலிம் |
| அஹ்காம் மாலை | - சிறுகாவியம் | ~ அப்துல்ஸலாம் ஆலிம்புலவர் |
| மழைக்காவியம் | - சிறுகாவியம் | ~ அப்துல்ஸலாம் ஆலிம்புலவர் |
| சூறாவளிக்காவியம் | - சிறுகாவியம் | ~ எம்.ஆதம்பாவா |
| கடைசிச்சொட்டு | - கவிதைத்தொகுதி | ~ எஸ்.நளீம் |
| விடுதலைநிகழ்வுகள் | - கவிதைத்தொகுதி | ~ எம்.எம்.அப்துல்றஹ்மான் |
| வெள்ளைத்தாளும் என் எழுதுபோலும் | - கவிதைத்தொகுதி | ~ யூ.எல்.எம்.ஹரீஸ் |

# யுத்தமே நீ சிந்தனை செய்துபார்

எம். எச். சிஹானா
ஓட்டமாவடி பாத்திமா
பாலிகா ம.வி





யுத்தமே!
நீ
கொஞ்சம்
சிந்தனை
செய்துபார்

மரத்தடி
நிழனில்
மணல் வீடு
கட்டி!
மணற்சோறு
உண்ட
நாட்கள் - அன்று
அகதி முகாமில்
அடுப்பூதி சோறு
சமைக்கும்
அவலநிலை
இன்று

நீ
வெடிப்பதனால்
எங்கள்
மானிட
யுகங்கள்
மரணித்துக்
கொண்டிருக்கின்றன.

உன்
கோரப்பிடிக்குள்
விழுங்கப்படும்
மனித - உடல்களின்
எண்ணிக்கை
புள்ளிவிபரங்களாக

தொடர்பு சாதனங்களில்
சிறியநேரம்
சமிஞ்சை
செய்வதோடு
முடிந்து
விடுகிறது.......!

உன்
கரங்கள்
நீளுவதால்
எத்தனையோ
மனித - முகவரிகள்
அகதி முகாம்களாகி
விட்டன
நீ
நீண்டகாலமாக
வசித்து விட்டுப்
போவதனால்
சோற்றுக்கு
ஏங்கும்
சோமாலியாக்களும்
விடிவுக்காக வாடும்
பலஸ்தீனங்களும்
அதிகரிக்கின்றன.

யுத்தக்
கொடுமையின்
ஏக்கத்தில்
எண்ணி வதங்கும்
பிஞ்சு நெஞ்சங்கள்
சமாதான
வெண்புறாவின்
வருகையை
எதிர்பார்த்து
நிற்கிறார்கள்
ஏன்
யுத்தமே -நீ
கொஞ்சம்
சிந்தனை
செய்துபார் .......!

நீ
வாழவேண்டும்
என்பதற்காக
சமாதானப்
பேச்சு வார்த்தைகளை
தலைப்பிலேயே
முடித்து விடாதே!

ஆயுதத்தால் - உன்
வயிற்றை
நிரப்பவேண்டும்
என்பதற்காக
மனிதநேயத்தை
அழித்துவிடாதே!

எங்கள் - அருகில்
மட்டுமல்ல
தொலைவில் கூட
நிற்காதே!
இந்த
உலகத்தைவிட்டே
வெகுதூரம்
சென்றுவிடு!
ஏனெனில்
எங்கள்
மனிதன்
வாழ வேண்டும்!

பிரதேச கலாச்சார விழாவையோட்டி நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றகவிதை.

# கௌரவிக்கப்படும் கலைஞர்கள்

## காசிம்பாவா இளையவள்

கௌரவிக்கப்படும் துறை - அண்ணாவி

அனுபவம் - சுமார் நாற்பது வருடங்கள் இக்காலப்பகுதியில் ஐந்து கோலாட்டக்குழுக்குள் இவரால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன கிராமியப்பாடல்கள் இயற்றுவதிலும் ஈடுபாடுகொண்டவர் தற்போதும் இத்துறையில் ஈடுபட்டுக்கொண்டுவருகின்றார்.

## முகம்மது ஷரீப் மீராசாகிம்

| | | |
|---|---|---|
| கௌரவிக்கப்படும் துறை | - | கிராமிய வைத்தியம் |
| அனுபவம் | - | இருபது வருடங்கள் |
| வயது | - | அறுபத்தாறு |
| முகவரி | - | மன்சூரா மன்சில்<br>சுலைமன் ஆலிம் வீதி.<br>வாழைச்சேனை |
| கல்வித்தகமை | - | க.பொ.த சாதாரண தரம்<br>இந்தியா - தனு பவுன்டேசனில்<br>ஒரு வருட கால கிராமிய வத்தியக் கற்கை நெறி பயின்று<br>சித்த மருத்துவச்சான்றிதழ் பெற்றவர் |

### கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக கலாச்சாரப் பேரவை நடாத்திய போட்டி நிகழ்ச்சிகளின் முடிவுகள்

| போட்டியின் | நிலை | வெற்றிபெற்ற போட்டியாளர் குழுவின் பெயர் | பாடசாலை பெயர் |
|---|---|---|---|
| (1) பேச்சு | 1ம் இடம் | எ.எம்.எம்.முஸம்மில் | அந்நூர் தேசிய பாடசாலை, வாழைச்சேனை |
| | 2ம் இடம் | ஆர்.எச்.எம்.முஜாஸ் | தேசிய பாடசாலை, ஓட்டமாவடி |
| | 3ம் இடம் | எஸ்.எ.றாஹிலா | பாத்திமா பாலிகா மகாவித்தியாலயம், ஓட்டமாவடி |
| (2) கட்டுரை | 1ம் இடம் | எம்.வி.சித்திறிஹானா | பாத்திமா பாலிகா மகாவித்தியாலயம், ஓட்டமாவடி |
| | 2ம் இடம் | எம்.வி.ஹஸீனாபானு | அந்நூர் தேசிய பாடசாலை, வாழைச்சேனை |
| | 3ம் இடம் | கே.வி.றிஹானா | பாத்திமா பாலிகா மகாவித்தியாலயம், ஓட்டமாவடி |
| (3) பட்டிமன்றம் | 1ம் இடம் | எ.வி.எஸ்.நஜ்மா குழுவினர் | பாத்திமா பாலிகா மகாவித்தியாலயம், ஓட்டமாவடி |
| | 2ம் இடம் | எம்.எச்.எம்.முர்ஷிதீன் குழுவினர் | தேசிய பாடசாலை, ஓட்டமாவடி |
| **திறந்த போட்டிகள்** | | | |
| (4) சிறுகதை | 1ம் இடம் | எம்.எம்.எப்.முஜீஹா | மௌலானா வீதி, ஓட்டமாவடி ~ 01 |
| | 2ம் இடம் | எச்.எம்.நூர்ஜகான் | எம்.எச்.எம். ஜஸ்வாடி, வாழைச்சேனை ~ 04 |
| | 3ம் இடம் | எம்.பி.பாயிஸ் | செய்த்தூன்மன்சில், விசிறோட், வாழைச்சேனை |
| (5) கவிதை | 1ம் இடம் | எம்.எச்.சிஹானா | பாத்திமா பாலிகா மகாவித்தியாலயம், ஓட்டமாவடி |
| | 2ம் இடம் | எஸ்.எச்.இம்தியாஸ் | 140/A, ஜும்மாமஸ்ஜித் வீதி, வாழைச்சேனை |
| | 3ம் இடம் | எச்.எம்.மன்சூர் | மன்பஉல்ஹுதா இஸ்லாமிய கல்வி நிறுவனம், மீராவோடை |
| (6) கோலாட்டம் தெரிவு செய்யப்பட்ட குழு | | எச்.எம்.அன்சார் குழுவினர் | அல்ஹிதாயா மகாவித்தியாலயம், மீராவோடை. |
| (7) நாடகம் தெரிவு செய்யப்பட்ட குழு | | எம்.வி.நபீர் குழுவினர் | இக்பால் இளைஞர் கழகம், பதுறியா, மாஞ்சோலை |

# இவர்களுக்கு நன்றி

ஆண்டுகள் பலவாக கலாசார விழாவொன்று காணமுயன்று நாம் உழைத்த உழைப்பில் பின்வருவோர் என்றும் எமது நன்றிக்குரியவர்கள்.

விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய கௌரவ கடற்றொழில் நீரியல்வள பிரதி அமைச்சர் முகைதீன் அப்துல்காதிர் அவர்கள், மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. இ. மோனகுருசாமி அவர்கள், ஆசிச்செய்தி வழங்கிய மேலதிக அரச அதிபர் திரு. வி. சண்முகம் அவர்கள், ஆசிச்செய்தி வழங்கிய வடக்கு கிழக்கு மாகாண கல்விசாரா அலுவல்கள் உதவிப்பணிப்பாளர் திரு.எஸ். எதிர்மன்னசிங்கம் அவர்கள், கலாசார விழாவை மிகச்சிறப்புற நடாத்துவதிலும், சிறப்பு மலரை வெளிக்கொணர்வதிலும் அயராது உழைத்த பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திரு. வெ. தவராஜா அவர்களுக்கும்

மேலும் எமது பணிகளுக்கு உதவிய
கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்,
காரியாலய உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமூர்தி முகாமையாளர்கள், சமூர்தி அபிவிருக்கி உத்தியோகத்தர்கள், ஏனய வெளிக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், போட்டி நிகழ்ச்சிகளில் தமது பாடசாலை மாணவ, மாணவியரைக் கலந்துகொள்ள ஊக்குவித்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்கிய மாணவ, மாணவிகள், போட்டிகளுக்கு தீர்ப்பு வழங்க உதவிய நடுவர்கள், மலருக்கு ஆக்கங்கள் தந்துதவிய அறிஞர்கள், எழுத்தாளர்கள், விளம்பர அனுபந்தங்கள் வழங்கிய நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், அன்பளிப்புக்கள் வழங்கிய தனவந்தர்கள், அட்டை ஓவியமும், எனைய ஓவியங்களும் வரைந்த ஓவியர் ஹிக்கோ, கணினி வடிவமைத்த கிரிஸ்டி, அச்சேற்றிய சென். ஜோசப். கத்தோலிக்க அச்சகத்தார், மற்றும் எமது முயற்சிகளில் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது ***மனமார்ந்த நன்றிகள்.***

**செயலாளர்**
**கலாசாரப்பேரவை,**
**பிரதேச செயலகம்,**
**ஓட்டமாவடி.**

**பிரதேச சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக்கூறுகிறது**

FRM

# M.M.MOHAMED BUHARY

*Proprietor*

# MARTIN RICE PRODUCTS

# FARWINS RICE MILL

S.M.T.HAJIYAR ROAD,
ODDAMAVADI,
SRI LANKA.

T.Phone : 065-57397
57456
078-603309

**பிரதேச சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக்கூறுகிறது**

மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய

## கோறளை மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## KORALAI CENTRAL MULTY - PURPOSE CO-OPRATIVE SOCIETY LIMITED

Phone : 065-57101 Regd. No: / 533 of 28.05.97. Y.M.M.A. Road, VALAICHCHENAI.

**உங்களின் நலன் கருதி பின்வரும் சேவைகளை மனமுவந்து வழங்குகின்றோம்.**

1. நுகர்ச்சிச் சேவை.
2. எரிபொருள் நிலையம்.
3. கிராமிய வங்கிச் சேவை.
4. விசேட வைபவங்களுக்கான தளபாடவ சதி களுக்கும்

**இன்றே நாடுங்கள் எமது நிறுவனத்தை**

**கோறளை மத்திய ப.நோ.கூ. சங்கம்**

**வாழைச்சேனை.**

பிரதேச சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக்கூறுகிறது

# ஹஸினா ரேடர்ஸ்

உங்களுக்குத் தேவையான சகல விதமான

மின்சார உபகரணப் பொருட்களுக்கும்

தண்ணீர் இணைப்பு பைப்லைன்

குழாய்களுக்கும்

அன்பளிப்புப் பொருட்களுக்கும்

நாடவேண்டிய இடம்.

# ஹஸினா ரேடர்ஸ்

பிரதான வீதி, ஓட்டமாவடி.

## பிரதேச சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக்கூறுகிறது

**மாணவர்களின் நன்மை கருதி நஷனல் பேப்பர் கம்பெனி லிமிட்டெட் பின்வரும் சேவைகளை தற்பொழுது வழங்குகின்றது.**

1. கழிவுக் கடதாசியை மூலப்பொருளாகக் கொண்டு மீழ் சுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (Recycled) காகிதத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட அப்பியாசப் புத்தகங்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்தல்.
2. பாடசாலைகளக்கும் அலுவலகங்களுக்கும் தேவையான சகல விதமான காகிதாதிகளையும் நியாயமான விலையில் விற்பனை செய்தல் .
3. பாவித்துக் கழித்த புத்தகங்கள் அப்பியாசப் புத்தகங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் கொள்வனவு செய்தல்.

*மேற்படி சேவைகளைப் பயன்படுத்தி நன்மைபெற மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர்.*

| | | |
|---|---|---|
| சந்தைப்படுத்தும் முகாமையாளர் | ஆலை முகாமையாளர் | ஆலை முகாமையாளர் |
| நஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட் | நஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட் | நஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட் |
| 356, யுனியன் பிளேஸ் | வாழைச்சேனை | எம்பிலிப்பிட்டியா. |
| கொழும்பு – 02 | | |
| தொலைபேசி இல: 01-434501 | தொலைபேசி இல: 065-57246 | தொலைபேசி இல: 047-30962-4 |
| தொலைநகல் இல: 01-434501 | தொலைநகல் இல: 065-57706 | தொலைநகல் இல: 047-30962 |

# பிரதேச சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக்கூறுகிறது

## ஓட்டமாவடி ப. நோ. கூ சங்கம்

**ஓட்டமாவடி பல. நோ. கூ. சங்கம் தனது வழமையான சேவைகளுடன் பின்வரும் சேவைகளையும் இலகுவாகவும் மலிவாகவும் நடாத்தி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றது.**

**01. எரிபொருள் நிரப்பு நிலையம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சகல எரிபொருட்களையும் விநியோகிக்கின்றது.

**02. முகவர் தபால் நிலையம்:-**

தொலைத் தொடர்பு நிலையம்

பெக்ஸ், போட்டோ பிரதி வசதிகள்.

பாடசாலை மாணவர்களுக்கான சகல பொருட்கள்

காரியாலய தேவைக்கான சகல காகிதாதிகளும்.

**03. வெற்றுப்பொருள் பகுதியின் சேவைகள்**

வெற்று பேக்குகள் விற்பனை.

திருமண வைபவம், ஏனைய வைபவங்களுக்கான தளபாடங்கள்

உணவு சமையல், பரிமாறலுக்கான பொருட்கள் அனைத்தும்

வாடகைக்கு விநியோகித்தல்.

**04. பஸ் சேவை:-**

தினமும் 6.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை வாகனசேவை

திருமண வைபவங்கள், யாத்திரிகைகள், கல்விச் சுற்றுலாச்

பிரத்தியேக வாடகைச் சேவையும்

ஓட்டமாவடி, பல.நோ. கூ. சங்கம்,
ஓட்டமாவடி.

**05. கிராமிய வங்கியின் சேவை:-**

சேமிப்புத் திட்டங்கள், நகை அடவு பிடித்தல்.

சுயதொழில் முயற்சிக் கடன் வசதிகள்

அரச உழியர்கள், அங்கத்தவர்களுக்கு கடன்

வழங்கல். பாலர்களுக்கான சேமிப்புக் கணக்குகள் போன்ற சேவைகள்

**06. பாலர் பாடசாலை**

நாம் சகல பாலர்களுக்கும் பாலர் கல்வியை சுமார் 18 வருடங்களாக ஊட்டி வருகிறோம்.

மேலும் பல சேவைகளை வழங்க காத்திருக்கும் எமது சங்கம்
கலாச்சாரப் பேரவையில் வெயீட்டு மலருக்கு வாழ்த்துக்கள்
கூறுவதுடன், வாடிக்கையாளர்கள் எங்கள் சேவையில் இணைந்து
உங்கள் தேவைகளை நிறைவேற்றுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறோம்

# සැමදා සැමවිට සැමට දිනුම්, දිනුම් පිට දිනුම් වසර පුරාම!

## என்றும் எப்பொழுதும் எல்லோருக்கும் பரிசுகள், ஆண்டுதோறும் மாபெரும் பரிசுக் குவியல்!

## Around-the-clock winnings Plus More throughout the year!

මහජන බැංකුවේ නම්කළ ඉතුරුම් ගිණුම් සඳහා දැන් මාසිකව පොලිය පිරිනැමේ.

மக்கள் வங்கியின் அனைத்து பெயர் குறிக்கப்பட்ட சேமிப்புக் கணக்குகள் தொடர்பாகவும் இப்பொழுது மாதாந்த வட்டி வழங்கப்படுகிறது.

**Now! Monthly interest paid to all branded Savings Accounts.**

මහජන බැංකුව



கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக
சாகித்திய விழா சிறப்புற வாழ்த்துக் கூறுகிறது

"யோகா அன் சன்ஸ்"

YOGA & SONS





அரசாங்க அங்கீகாரம் பெற்று ஒப்பந்தகாரர்கள்,
கட்டிட பொருள் விநியோகங்கள், வாடகைக்கு வாகனங்கள் வழங்கல்

"யோகா அன் சன்ஸ்"

உரிமையாளர் : எஸ். யோகநாதன் சமாதானநீதவான்

கல்குடா வீதி,
வாழைச்சேனை.

தொலைபேசி இல : 065-57017

*St. Joseph's Catholic Press, Batticaloa*
**St. Ignatius** *Type Setting* - *28, Sinnalebbe Street, Batticaloa.*